Follow our WhatsApp Channel
Scan this QR code using the CAMERA to view or follow our Channel
PADMA DIGITAL BROADCAST
Tamilnadu Epaper
WhatsApp channel

PRGI No. TNBIL/25/A1569

வைகறையில் பேப்பர்பாய்
www.paperboy.biz
VAIGARAIYIL PAPERBOY




சென்னை மலர்: 01 இதழ்: 175 06.02.2026 வெள்ளிக்கிழமை | Chennai | Volume: 01 | Issue: 175 | Friday | pages 8 | Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMILNADU AND PUDUCHERRY

# புதுப்பிக்கப்பட்ட என்.எஸ்.கே சிலையை முதல்வர் திறந்து வைத்தார்

**சென்னை,பிப்.6:**

சென்னை கலைவாணர் அரங்கத்தில் புதுப்பிக்கப்பட்டுள்ள கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் சிலையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில் என்.எஸ். கிருஷ்ணன் வாரிசுகள், நடிகர் சங்கத்தினர் பங்கேற்றனர்.

நாகர்கோவில் சுடலை முத்துகிருஷ்ணன் ஆகிய "என்.எஸ்.கே" 29.11.1908 அன்று பிறந்தார். 1940களிலும், 1950களிலும் தமிழ்த் திரையுலகின் மிகச் சிறந்த நகைச்சுவை நடிகர், பாடகர், நாடகத் தயாரிப்பாளர், சினிமா தயாரிப்பாளர் என்றெல்லாம் புகழுடன் விளங்கியவர். இவரை, "இந்தியாவின் சார்லி சாப்ளின்" என்றும் புகழ்வர். பேரறிஞர் அண்ணா அவர்களோடும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களோடும் நெருங்கிப் பழகியவர். தாம் ஈட்டிய செல்வத்தின் பெரும்பகுதியை உதவி என வருவோர்க்கு வாரி வாரி வழங்கிய வள்ளல் இவர். கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் தம் வாழ்நாளில் கலந்து கொண்ட கடைசி நிகழ்ச்சியாகச் சேலத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்தார்.

அதேபோல, 1968 சனவரியில் பேரறிஞர் அண்ணா அவர்கள் நடத்திய இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டு ஊர்வத்திற்காகத் திரட்டப்பட்ட நிதியில் எஞ்சிய தொகையை என்ன செய்வதென ஊர்வலப் பொறுப்பாளர்களாகத் திகழ்ந்த புகழ்வாய்ந்த திரையுலகச் சிற்பிகளாக விளங்கிய பெருந்தகையாளர்கள் எஸ்.எஸ்.வாசன், ஏ.எல்.சீனிவாசன், ஏ.வி.மெய்யப்பச் செட்டியார் மூவரும் அந்த ஊர்வலக் குழுவின் தலைவரான அந்நாளைய பொதுப்பணித்துறை அமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைக் கேட்டனர். அப்போது அவர்களிடம் அந்தத் தொகையில் "கலைவாணர் சிலை வைக்கலாம்" எனக் கலைஞர் கூறினார். அவ்வாறே அந்நிதி மூலம் தியாகராய நகரில் ஜி.என்.செட்டி சாலையில் கலைவாணரின் சிலை நிறுவப்பட்டது. அந்தச் சிலையை அன்றைய முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் 14.1.1969 அன்று திறந்து வைத்தார்கள்.



நகைச்சுவை மன்னர் கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணனின் திருவுருவச் சிலை... திறந்து வைக்கிறார் முதலமைச்சர்!

இந்தக் கலைவாணர் சிலையைத் திறந்து வைத்ததுதான் பேரறிஞர் அண்ணா அவர்கள் தம் வாழ்நாளில் கலந்து கொண்ட கடைசிப் பொது நிகழ்ச்சியாகும்.

அதேபோல, கலைவாணர் அவர்கள் தம் வாழ்நாளில் கடைசிப் பொது நிகழ்ச்சியாகப் பங்கு பெற்றது சேலத்தில் நடைபெற்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் படத்திறப்பு நிகழ்ச்சி. தமிழினச் செம்மல்களான இந்த இருவரின் வாழ்விலும் அமைந்த இந்த இறுதிப் பொதுநிகழ்ச்சிகள் வரலாற்றில் குறிப்பிடத்தக்கவையாகும்.

அதுமட்டுமல்ல,"சென்னை அரசினர் தோட்டத்தில் இன்றைய ஓமந்தூரார் வளாகத்தில் அந்நாளில் இருந்த பாலர் அரங்கத்தைப் புதுப்பித்து, 'கலைவாணர் அரங்கம்' என அதற்குப் பெயர் சூட்டியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான்.

கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்களின் திருவுருவச் சிலை ஜி.என்.செட்டி சாலை - திருமலைப்பிள்ளை சாலை சந்திப்பில் 1999 ஆம் ஆண்டில் மேம்பாலம் கட்டப்பட்டபோது சாலை ஓரத்தில் இடம் மாற்றி அமைக்கப்பட்டது. இவ்விடத்தில் உள்ள கலைவாணரின் திருவுருவச் சிலையினை கலைவாணர் அரங்க வளாகத்தினுள் மாற்றியமைக்குமாறு கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் குடும்பத்தினர் அரசிடம் கோரிக்கை வைத்தனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலைவாணர் குடும்பத்தினரின் கோரிக்கையை ஏற்று, சென்னை, ஜி.என்.செட்டி சாலையில் அமைந்திருந்த அன்னாரது திருவுருவச் சிலையினைப் புதுப்பித்து சென்னை கலைவாணர் அரங்க வளாகத்தில் நிறுவப்படும் என அறிவித்தார்கள். அதன்படி சென்னை கலைவாணர் அரங்க வளாகத்தில் ரூ.50 லட்சம் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள புதுப்பிக்கப்பட்ட கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் சிலையினை முதல்வர்கள் மு.க.ஸ்டாலின் நேற்று (5.2.2026) திறந்து வைத்தார். சென்னை கலைவாணர் அரங்கத்தில் புதுப்பிக்கப்பட்டுள்ள கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் சிலையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில் என்.எஸ். கிருஷ்ணன் வாரிசுகள், நடிகர் சங்கத்தினர் மற்றும் அமைச்சர்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு, மா. சுப்பிரமணியன், சுவாமிநாதன், அன்பரசன், நடிகர் நாசர் உள்ளிட்டோரும் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில் என்.எஸ்.கிருஷ்ணன் வாரிசுகள், நடிகர் சங்கத்தினர் பங்கேற்றனர். கைவினைப் பொருட்கள் கண்காட்சி மற்றும் கருத்தரங்கத்தினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கி வைத்தார். கைவினைத் தொழிலில் வாழ்க்கையை அர்ப்பணித்த 10 கைவினைஞர்களுக்கு "வாழும் கைவினைப் பொக்கிஷம்" விருதுகள், படைப்புகளில் சிறந்த 10 கைவினைஞர்களுக்கு பூம்புகார் மாநில விருதுகளையும் முதலமைச்சர் வழங்கினார்.

# எம்எல்ஏ பழனியாண்டியை கைது செய்ய வேண்டும்: அன்புமணி, அண்ணாமலை, விஜய் வலியுறுத்தல்

**சென்னை,பிப்.6:**

கரூர் மாவட்டம் கிருஷ்ண ராயபுரம் பகுதியில் விதிகளுக்குப் புறம்பாக செயல்பட்ட கல்குவாரி குறித்து செய்தி சேகரிக்கச் சென்ற தனியார் செய்தி தொலைக்காட்சி செய்தியாளர், ஒளிப்பதிவாளர் மீது, எம்எல்ஏ பழனியாண்டி மற்றும் அவரது ஆதரவாளர்கள் சரமாரியாகத் தாக்கியதாக புகார்கள் எழுந்தன.

இது தொடர்பான வீடியோ வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பாக அரசியல் கட்சித் தலைவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கைகளில் கூறியிருப்பதாவது:

பாமக தலைவர் அன்புமணி: கனிம வளக் கொள்ளை நடப்பதை அம்பலப்படுத்த முயன்ற செய்தியாளர்களை திமுக எம்எல்ஏ பழனியாண்டி தாக்கியதற்கான வீடியோ ஆதாரங்கள் வெளியாகியுள்ளன. எனவே, பழனியாண்டியையும், அவரது ஆதரவாளர்களையும் உடனடியாக கைது செய்ய வேண்டும்.



தவெக தலைவர் விஜய்: ஊடகவியலாளர்கள் மீது ஸ்ரீரங்கம் தொகுதி திமுக எம்எல்ஏ பழனியாண்டி நடத்திய தாக்குதல் கண்டனத்திற்குரியது. அவர் மீது வழக்குப் பதிவு செய்து, உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட ஆட்சியை மக்கள், வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் தூக்கி எறியப் போவது உறுதி.

தமிழக பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை: ஊடகவியலாளர்கள் மீது திமுக எம்எல்ஏ பழனியாண்டி தாக்குதல் நடத்தும் வீடியோ மிகுந்த அதிர்ச்சி அளிக்கிறது. பழனியாண்டி உள்ளிட்ட அனைவரையும் உடனடியாக கைது செய்ய வேண்டும்.

# சென்னையில் செஷல்ஸ் அதிபர்! முதல் இந்திய பயணம்!

செஷல்ஸ் நாட்டின் அதிபராக கடந்தாண்டு பதவியேற்ற பேட்ரிக் ஹெர்மினி, முதல்முறையாக இந்தியாவுக்கு பயணம் மேற்கொண்டுள்ளார்.

சென்னை விமான நிலையத்துக்கு வருகைதந்த அவரை தமிழக அமைச்சர் மதிவேந்தன், சென்னை மேயர் பிரியா உள்ளிட்டோர் நேரில் சென்று வரவேற்றனர்.

இந்தியாவுக்கு 7 நாள்கள் பயணமாக வந்துள்ள பேட்ரிக் ஹெர்மினி, தில்லியில் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவை சந்தித்துப் பேசவுள்ளார்.

தொடர்ந்து, பிரதமர் நரேந்திர மோடியுடன் சர்வதேச பிரச்னைகள், இருநாட்டு உறவுகள் மற்றும் ஒப்பந்தங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

ஹெர்மினியை வரவேற்று வெளியுறவுத் துறை அமைச்சகம் எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவில், "நீண்டகால மற்றும் பன்முகத்தன்மை கொண்ட இந்தியா - செஷல்ஸ் இருதரப்பு உறவுகளின் 50 ஆண்டுகளை நினைவுகூர்கிறோம்.

இந்தியாவுக்கான தனது முதல் அரசுமுறைப் பயணமாக சென்னைக்கு வருகை தந்துள்ள செஷல்ஸ் அதிபர் பேட்ரிக் ஹெர்மினியை அன்புடன் வரவேற்கிறோம்" எனக் குறிப்பிட்டுள்ளது.




நாடு முழுவதும் பல்வேறு நகரங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் அவர் கலந்துகொள்ளவுள்ளார்.

முன்னதாக, செஷல்ஸில் நடைபெற்ற பேட்ரிக் ஹெர்மினியின் பதவியேற்பு விழாவில் குடியரசுத் துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது.

## இன்றைய நாள்

வெள்ளிக்கிழமை
(6–02–2026)
விசுவாவசு ஆண்டு, தை–23
பிறை: தேய்பிறை
திதி
பஞ்சமி மறுநாள் விடியற்காலை 4.03 வரை பிறகு சஷ்டி
நட்சத்திரம்:
அஸ்தம் பின்னிரவு 3.03 வரை பிறகு சித்திரை
யோகம்
அமிர்த/சித்தயோகம்
ராகுகாலம்
காலை 10.30–12.00 மணி.
எமகண்டம்
பிற்பகல் 3.00–4.30 மணி.
சூலம் – மேற்கு
நல்ல நேரம் :
காலை 6–7 மணி.
மாலை 5–6 மணி

| | |
|---|---|
| மேஷம் | லாபம் |
| ரிஷபம் | விருத்தி |
| மிதுனம் | நிறைவு |
| கடகம் | கவனம் |
| சிம்மம் | முயற்சி |
| கன்னி | ஊக்கம் |
| துலாம் | நன்மை |
| விருச்சிகம் | சுகம் |
| தனுசு | மேன்மை |
| மகரம் | உற்சாகம் |
| கும்பம் | தெளிவு |
| மீனம் | கடமை |

# தங்கம் விலை பவுனுக்கு ரூ.4,640 குறைந்தது!



**சென்னை,பிப்.6:** உலக அளவில் தங்கத்தை இறக்குமதி செய்யும் நாடுகளில் இந்தியா முன்னணியில் உள்ளது. அதனால் சர்வதேச பொருளாதார மற்றும் அரசியல் சூழல், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு, தங்கத்தின் மீதான முதலீடு அதிகரிப்பு ஆகியவற்றின் அடிப்படையில், தங்கத்தின் விலை நிர்ணயிக்கப்படுகிறது.

இந்த சூழலில் கடந்த சில நாட்களாகவே தங்கம் விலை உயர்ந்தும் குறைந்தும் வருகிறது. உலக நாடுகளுக்கு இடையிலான வர்த்தக ரீதியான உறவு இதற்கு காரணம் என துறை சார்ந்த வல்லுநர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

அந்த வகையில் சென்னையில் 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை இன்று (பிப்.5) கிராமுக்கு ரூ.580 குறைந்து, ஒரு கிராம் ரூ.14,320-க்கு விற்பனை ஆகிறது. இன்று ஒரே நாளில் பவுனுக்கு ரூ.4,640 குறைந்து, ஒரு பவுன் ரூ.1,14,560-க்கு விற்பனை ஆகிறது.

24 காரட் சுத்த தங்கம் பவுனுக்கு ரூ.5,072 குறைந்து, ஒரு பவுன் ரூ.1,24,976-க்கும் விற்பனை ஆகிறது. 18 காரட் தங்கம் பவுனுக்கு ரூ.4,000 குறைந்து, ஒரு பவுன் ரூ.98,000-க்கும் விற்பனை ஆகிறது.

இதேபோல வெள்ளி விலையும் இன்று சரிந்துள்ளது. வெள்ளி கிராமுக்கு ரூ.20 குறைந்து, ரூ.300-க்கும், கட்டி வெள்ளி கிலோவுக்கு ரூ.20,000 குறைந்து, ரூ.3,00,000-க்கும் சந்தையில் விற்பனை ஆகிறது.

# பிரதமர் மோடி மீண்டும் 28-ந் தேதி தமிழகம் வருகை: மதுரை பொதுக்கூட்டத்தில் பங்கேற்பு

**சென்னை,பிப்.6:**

தமிழகத்தில் அடுத்த 2 மாதத்தில் சட்டசபை தேர்தல் நடைபெற இருக்கிறது. தேர்தலை எதிர்கொள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் தயாராகி வருகின்றன. கூட்டணி குறித்த பேச்சு வார்த்தையை பரபரப்பாக நடத்தி வருகின்றன.

இந்த நிலையில், தமிழகத்தில் எதிர்க்கட்சியான அ.தி.மு.க.வுடன் மத்தியில் ஆளுங்கட்சியான பா.ஜ.க. கைகோர்த்துள்ளது. இந்த கட்சிகள் தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் பல்வேறு கட்சிகள் இடம்பெற்றுள்ளன.



இந்த நிலையில், தேசிய ஜனநாயக கூட்டணியின் முதல் பொதுக்கூட்டம் கடந்த மாதம் (ஜனவரி) 23-ந் தேதி சென்னையை அடுத்த மதுராந்தகத்தில் நடைபெற்றது. இதில், பங்கேற்று பேசிய பிரதமர் நரேந்திரமோடி, தமிழகத்திற்கு "இரட்டை என்ஜின் ஆட்சி தேவை" என்று பேசினார். அதாவது, அ.தி.மு.க., பா.ஜ.க.வை என்ஜின்களாக உருவகப்படுத்தி பேசினார்.

இதனால், வெகுண்டெழுந்த முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின், "டப்பா என்ஜின் ஆட்சி எல்லாம் தமிழகத்தில் எடுபடாது" என்று கருத்து தெரிவித்தார். இதுதொடர்பாக, த.வெ.க. தலைவர் விஜய், கட்சியின் 3-வது ஆண்டு விழாவில் பேசும்போது, "டாப் என்ஜின் நாம் தான். தேர்தலில் நம்மை வெற்றிபெற வைக்க தமிழக மக்கள் தயாராகிவிட்டார்கள்" என்று பேசினார்.

இப்படி, பிரதமர் மோடியின் 'என்ஜின்' பேச்சு தமிழக அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலையில், பிரதமர் நரேந்திரமோடி மீண்டும் தமிழகம் வர இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. இம்மாதம் 28-ந் தேதி (சனிக்கிழமை) மதுரையில் நடைபெறும் தேசிய ஜனநாயக கூட்டணியில் அவர் பங்கேற்று பேசுவதாகவும் பா.ஜ.க. வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# தலைமைத் தேர்தல் ஆணையருக்கு எதிராக பதவி நீக்கத் தீர்மானம்? 'எதிர்க்கட்சிகள் கூட்டாக முடிவெடுக்கும்'




**சென்னை,பிப்.6:**

இந்திய தலைமைத் தேர்தல் ஆணையா் ஞானேஷ் குமாரை பதவிநீக்கம் செய்ய வலியுறுத்தி, நாடாளுமன்றத்தில் தீா்மானம் கொண்டுவருவது குறித்து அனைத்து எதிா்க்கட்சிகளும் ஆலோசித்து, கூட்டாக முடிவெடுக்கும் என்று காங்கிரஸ் புதன்கிழமை தெரிவித்தது.

ஞானேஷ் குமாருக்கு எதிராகப் பதவி நீக்க தீா்மானம் கொண்டுவரப்பட வேண்டும் என்று மேற்கு வங்க முதல்வரும், திரிணமூல் காங்கிரஸ் தலைவருமான மம்தா பானா்ஜி வலியுறுத்திய நிலையில், காங்கிரஸ் இவ்வாறு கூறியுள்ளது.

மேற்கு வங்கத்தில் வாக்காளா் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த (எஸ்ஐஆா்) பணிக்கு கடும் எதிா்ப்பு தெரிவித்துவரும் மம்தா பானா்ஜி, தில்லியில் தலைமைத் தோ்தல் ஆணையா் ஞானேஷ் குமாா் மற்றும் இரு தோ்தல் ஆணையா்களை தனது கட்சிப் பிரதிநிதிகளுடன் கடந்த செவ்வாய்க்கிழமை சந்தித்துப் பேசினாா். அப்போது, தங்களை அவமதிக்கும் வகையில் ஆணவத்துடன் நடந்துகொண்டதாக ஞானேஷ் குமாா் மீது மம்தா பானா்ஜி குற்றஞ்சாட்டினாா். அவரைப் பதவி நீக்கம் செய்வதற்கு நாடாளுமன்றத்தில் தீா்மானம் கொண்டுவரும் முன்னெடுப்பை எதிா்க்கட்சிகள் மேற்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தினாா்.

இந்நிலையில், நாடாளுமன்ற வளாகத்தில் செய்தியாளா்களிடம் புதன்கிழமை பேசிய காங்கிரஸ் பொதுச் செயலா் கே.சி. வேணுகோபால், 'மேற்கு வங்க முதல்வரின் யோசனையை நாங்கள் நோ்மறையாகப் பரிசீலித்து வருகிறோம். இந்த விவகாரம் குறித்து காங்கிரஸுடன் திரிணமூல் காங்கிரஸ் ஏற்கெனவே பேசியுள்ளது.

ஒட்டுமொத்த எதிா்க்கட்சிகளும் ஆலோசித்து, கூட்டாக முடிவெடுக்கும்' என்றாா். அதேநேரம், மம்தாவின் யோசனை குறித்து கருத்து தெரிவிக்க மக்களவை எதிா்க்கட்சித் தலைவா் ராகுல் காந்தி மறுத்துவிட்டாா்.

அகிலேஷ் ஆதரவு: தலைமைத் தோ்தல் ஆணையருக்கு எதிராக பதவிநீக்கத் தீா்மானம் கொண்டுவர சமாஜவாதி தலைவா் அகிலேஷ் யாதவ் ஆதரவு தெரிவித்துள்ளாா்.

எஸ்ஐஆா் வழக்கில் உச்சநீதிமன்றத்தில் புதன்கிழமை தானே ஆஜராகி மம்தா வாதிட்டதை வரவேற்று, அகிலேஷ் கூறியதாவது:

பாஜகவின் கருப்புச் செயல்களுக்கு எதிராக கருப்பு அங்கி அணிந்துள்ளாா் மம்தா. நாங்கள் அவரது பக்கம் உள்ளோம். வாக்குரிமையை இழந்தால், அனைத்தையும் இழக்க நேரிடும். வாக்குரிமையைப் பாதுகாக்க மக்கள் முன்வர வேண்டும் என்றாா்.

## பெருமாள் மஹா சம்ப்ரோஷணம் யாகசாலை திவ்ய அலங்கார சேவை



திருக்கோஷ்டியூர் ஸ்ரீ சோம்ய நாராயண பெருமாள் மஹா சம்ப்ரோஷணம் யாகசாலை திவ்ய அலங்கார சேவை.

## இளையான்குடியில் மஞ்சள் பை பிரச்சாரம்




**மானாமதுரை, பிப். 6:**

சிவகங்கை மாவட்டம் இளையான்குடியில் கல்லூரி மாணவ மாணவிகளுக்கு சுற்றுச்சூழல் சம்பந்தமாக நம் மண்ணை பாதுகாக்கும் வகையில் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி மரக்கன்றுகள் மஞ்சப்பை பனை ஓலையில் உற்பத்தியாக கூடிய கைவினைப் பொருட்கள் வழங்கி சுற்றுச்சூழலை அனைவரும் பாதுகாக்க வேண்டும் அதிகமான மரங்கள் நட வேண்டும் பல உயிர்களைப் பாதுகாக்க வேண்டும் என சமூக ஆர்வலர் அப்துல் மாலிக் தலைமையில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

## தமிழ் நாடு அரசு அனைத்துறை ஓய்வூதியர் சங்கம் செங்கம் வட்ட கிளை சார்பாக ஓய்வூதியர் அமைப்புதினம்



**செங்கம், பிப்.06:**

தமிழ் நாடு அரசு அனைத்துறை ஓய்வூதியர் சங்கம் செங்கம் வட்ட கிளை சார்பாக ஓய்வூதியர் அமைப்புதினம் 3-2.2026 ) மறுநாள் 4 அன்று காலை 9.30க்கு செங்கம் கணேசர் மண்டபத்தில் கொண்டாடப்பட்டது அது சமயம் செயலாளர் தோழர் பத்மநாபமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. தலைவர் தோழர்கே.எஸ்.மோகன் சங்க அமைப்பு கொடி ஏற்றினார் உடன் துணைதலைவர் K.M சுப்ரமணியன் அமைப்பாளர் புனிதன், DRO சண்முகம் அவர்கள் மற்றும் தோழர் வெங்கடேசன் த.ஆசிரியர் ஓய்வு,சங்க உறுப்பினர்கள் கலந்துகொண்டார்கள் இனிப்பு வழங்கப்பட்டது.

## சபாநாயகர் சொன்னது மிகப்பெரிய பொய் – காங்கிரஸ் எம்பி சுதா



**புதுடெல்லி, பிப்.06:**

மக்களவையில் பிரதமர் மோடி, குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குப் பதிலளிக்கத் திட்டமிட்டிருந்தபோது, சில காங்கிரஸ் எம்.பி.க்கள் பிரதமரின் இருக்கையைச் சூழ்ந்து கொண்டு "முன்னெப்போதும் இல்லாத அசம்பாவிதத்தை" செய்யத் திட்டமிட்டிருந்ததாக தமக்குத் தகவல் கிடைத்ததாக சபாநாயகர் ஓம் பிர்லா தெரிவித்துள்ளார்.

இதனால் ஏற்பட்ட பாதுகாப்புக் கவலைகள் மற்றும் அவையின் கண்ணியத்தைக் கருத்தில் கொண்டு, பிரதமரைச் சபைக்கு வர வேண்டாம் என்று தாமே அறிவுறுத்தியதாகவும் அவர் தெரிவித்தார்.

பிரதமர் மோடியை தாக்க எதிர்க்கட்சிகள் சதி செய்துள்ளதாக சபாநாயகர் ஓம் பிர்லா கூறியது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்நிலையில் இதற்கு பதலளித்துள்ள காங்கிரஸ் எம்.பி. சுதா, "மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லாவின் குற்றச்சாட்டு மிகப்பெரிய பொய். ராகுல் கூறும் கருத்துக்களுக்கு ஆளும்கட்சியினர் பதிலளிக்க வேண்டும்.

ஜனநாயக முறைப்படி நாடாளுமன்றத்துக்கு உள்ளே அமர்ந்து போராடினோம்" என்று தெரிவித்தார்.

## கணக்கன் பட்டி சற்குரு பீடம் சார்பில் இலவச கண் சிகிச்சை முகாம்

**பழனி, பிப் .6:**

திண்டுக்கல் மாவட்டம் பழனி கணக்கன்பட்டி ஓம் ஸ்ரீ சற்குரு பழனிசுவாமிகள் டிரஸ்ட் மதுரை அரவிந்த் கண் மருத்துவமனை திண்டுக்கல் மாவட்ட பார்வையிழப்பு தடுப்பு சங்கம் இணைந்து நடத்தும் இலவச கண் சிகிச்சை முகாம் வரும் 8 ந்தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிமுதல் - பகல் 1.00 மணிவரை நடைபெறுகிறது.

கணக்கன்பட்டியில் உள்ள கஸ்தூரி மஹாலில் நடைபெறுகிறது. முகாம்களில் கண்ணிற்குள் பொறுத்தப்படும் IOL லென்ஸ் இலவசம் கண்ணில் புரை நீக்கம்: நோயாளிகள் முகாம் தினத்தன்று மதுரை அரவிந்த் கண் மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்படுவார்கள்.



அவர்களுக்கு உள்விழி லென்ஸ் அறுவை சிகிச்சை, தங்கும் வசதி, உணவு மற்றும் போக்குவரத்து அனைத்தும் இலவசம். அறுவை சிகிச்சை செய்தவர்களுக்கு ஒரு மாதம் கழித்து மறுபரிசோதனை இலவசமாக செய்யப்படும்.

சர்க்கரை நோய் உள்ளவர்களுக்கு கண்விழித்திரையில் அறிகுறி இல்லாமலேயே பார்வை இழப்பு ஏற்பட வாய்ப்புண்டு.

இம்முகாமில் கலந்து கொண்டு உங்கள் விழித் திரையை பரிசோதனை செய்து கொள்ளலாம். கிட்டப்பார்வை,தூரப்பார்வை: வெள்ளெழுத்து உள்ளவர்களுக்கு கண் கண்ணாடிகள் ரூபாய். 300 லிருந்து முகாம் நடக்கும் இடத்திலேயே கிடைக்கும்.

இம்முகாமிற்கு வரும்போது உங்கள் முகவரி சான்றிதழின் நகலை (ஆதார் அட்டை அல்லது வாக்காளர் அடையாள அட்டை அல்லது ரேஷன்கார்டு] கொண்டு வந்து சீட்டு பதியும் இடத்தில் கொடுக்கவும்.

மேலும் தகவலுக்கு தொடர்புக்கு: 94867 76551, 94682 12345 கணக்கன்பட்டி ஓம் ஸ்ரீ சற்குரு பழனிசுவாமிகள் டிரஸ்ட் மோகன் தோட்டம், கணக்கன்பட்டி, பழனி வட்டம், திண்டுக்கல் மாவட்டம் .

## வைர விழா கண்ட ராஜ குலத்தோர் மகா சங்கத்தினர் கோரிக்கை மனு




**திருவாரூர், பிப்.06:**

வைர விழா கண்ட ராஜ குலத்தோர் மகா சங்கத்தின் பொதுச்செயலாளர், R. குழந்தை வேலு அவர்கள் தலைமையில் சங்க தலைமை நிர்வாகிகள், திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்தில் கோரிக்கை மனு அளித்தனர்,

01, கல்வி, வேலை வாய்ப்பு,சமூக அந்தஸ்து, பொருளாதாரத்தில் மிகவும் , பின்தங்கிய நிலையில் உள்ள சலவையாளர்களுக்கு, தனி உள் ஒதுக்கீடு வழங்க வேண்டும், Bc, யிலிருந்து MBC உருவாக்கியதுபோல் சலவையாளர்களுக்கு, மருத்துவர்களுக்கும் மிக மிக பின்தங்கியோர் பட்டியலை உருவாக்கி பட்டியல் இன மக்களுக்கு, அரசு மூலம் என்னென்ன சலுகைகள், கிடைக்கிறதோ, அவை அனைத்தும் சலவையாளர்களுக்கும் கிடைத்திட வழிவகை செய்ய வேண்டும்,

02, சலவை தொழிலாளர்கள் மருத்துவர்களுக்கு தனி தொகுதி சுழற்சி முறையில் உருவாக்கி ஒதுக்கீடு செய்ய வேண்டும், சட்டமன்றம் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், ஊரக உள்ளாட்சி அமைப்புகள், நியமன உறுப்பினர்களை, நியமிக்க வேண்டும்,

03, நாகரிகம் தொழில்நுட்பம் விஞ்ஞானம் வளர்ந்து வரும் இந்த காலத்தில் குடி ஊழியம் என்ற பெயரில் வண்ணார், முடி திருத்துவோர், ஜாதியினரை வர்ணாசிரம தர்மம் என்ற பெயரால் அந்த கால சடங்குகளை தடுத்து நிறுத்த வேண்டும், எங்கள் ஜாதியினருக்கு சட்ட பாதுகாப்பு வழங்கிட வேண்டும்,

04, மீனவர்களுக்கு மீன்பிடி தடைகாலங்களில் கொடுக்கும் நிவாரணம் தொகை போல், மழைக்காலங்களில் சலவை தொழிலாளர்களுடைய வாழ்வாதாரம் மிக மிக பாதிப்படைகிறது, அப்பொழுது சலவையாளர்களுக்கும், அரசு நிவாரணம் வழங்க வேண்டும்,சிறு குறு தொழிலாளர்களுக்கு, நெசவாளர்களுக்கு, மின்சார மானியம் கொடுப்பது போல், சலவை தொழிலாளர்களுக்கும் விதிமுறைகளை தளர்த்தி, அரசு மானியம் வழங்கிட ஆவண செய்ய வேண்டும்,

05, திருவாரூர் நகர பகுதியில் தொழில் செய்ய ஏற்ற வகையில் இலவச மனை பட்டாவுடன், கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் வீடு கட்டி தர வேண்டும், ஏற்கனவே திருவாரூர் நகரம் நெய் விளக்கு தோப்பு பகுதியில் மிக பழமையான சலவைத் துறை மிக பழுதடைந்துள்ளது, அதை தொழில் செய்ய உகந்த அளவிற்கு அதனை புதுப்பித்து சலவை துறை அமைத்து தர வேண்டும், ஆற்றங் கரையோரம் மண் அரிப்பு ஏற்பட்டு ஆற்றில் துறையில்லாமல் உள்ளது, படித்துறைகள் அமைத்து தொழில் செய்ய உகந்த வகையில் அமைத்து தர வேண்டும், மற்றும் பல கோரிக்கைகளை வலியுறுத்தி, வைர விழா கண்ட ராஜ குலத்தோர் மகா சங்கத்தின் சார்பாக மாவட்ட ஆட்சியர் அவர்களிடத்தில் மனு வழங்கப்பட்டது,

அப்போது உடன் சங்கசெயல் தலைவர் S,முத்தையன், சங்க பொருளாளர், J, நடராஜன், துணைச்செயலாளர் P,செல்வராஜ், துணைத்தலைவர், V.செந்தில் குமார், இணைச் செயலாளர்கள், P, முத்துக்கிருஷ்ணன், M. கண்ணன், நகர செயற்குழு உறுப்பினர் A.மாரிமுத்து ஆகியோர் உடன் இருந்தனர்.

## தமிழன் பிச்சையெடுக்க மாட்டான்... இந்தியில் பிச்சையெடுங்கள் - வீடியோ வெளியிட்ட சினேகன்

**சென்னை, பிப்.06:**

தமிழ் படித்தால் பிச்சை கூட கிடைக்காது என நிர்மலா சீதாராமன் பேசியிருந்தார்.

தமிழன் பிச்சை எடுக்க மாட்டான், அதுவும் உங்கள் பிச்சையை ஏற்கவே மாட்டான்.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடர் தொடங்கி நடைபெற்று வருகிறது. இந்நிலையில் நேற்று குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் மக்கள் நீதி மய்யத் தலைவரும், எம்.பி-யுமான கமல்ஹாசன் உரையாற்றினார்.

மாநிலங்களவையில் ஆற்றிய முதல் உரையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றிக்கூறி தொடங்கிய அவர், ஆரம்பத்தில் ஆங்கிலத்தில் தொடர்ந்தார். கடைசியில் தமிழில் முடித்தார். தமிழில் அவர் பேசியது தற்போது கவனம் ஈர்த்துவருகிறது.

தமிழில் உரையைத் தொடங்கிய கமல்ஹாசன், "நீங்கள் வெள்ளைக்கார கல்வி கற்றது கண்டிப்பாய் கற்பூர புத்திதான். அது காற்றோடு போய் பல ஆண்டுகள் ஆகிவிட்டன. அதன் பிறகு உங்கள் பிச்சை பாத்திரம் உருமாற்றம் பெற்றது. பிச்சை குவளை பெரும் உண்டியலானது. அந்த உண்டியலை உடைத்து நிதி திரட்ட உதவுவோர், இன்று தமிழை, தமிழரை பார்த்து என்ன சொல்லுகிறீர்கள். தமிழ் பிச்சை எடுக்கக்கூட உதவாதா? ஒரு தர்க்கத்திய அறிவுரை தந்தாய். ஓரளவு உண்மைதான். தமக்கென உங்கள் நிதியை திரட்ட ஆங்கிலத்தில், இந்தியில் பிச்சை எடுக்கலாமே... தமிழ் பிச்சை எடுக்க உதவாது, திருடவும் உதவாது.



தமிழன் பிச்சை எடுக்க மாட்டான், அதுவும் உங்கள் பிச்சையை ஏற்கவே மாட்டான். தங்கச்சி,ஓட்டையும்,நாட்டையும் இந்த கமலஹாசன் விற்கவே மாட்டான். உங்கள் சாபங்களில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை. உங்களுக்கு இருக்கக்கூடும் என்ற நம்பிக்கையில், நீங்கள் உணர என் திட்டத்தை சாபமாய் போடுகிறேன், கருணையுடன் நீங்களே ஏற்பீர்" என்று தெரிவித்தார்.

கடந்த ஆண்டு தேசிய கல்விக் கொள்கைவிவகாரம்தொடர்பாக நாடாளுமன்றத்தில் பேசிய மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், பெரியார் பேசியதை குறிப்பிட்டு, "தமிழ் படித்தால் பிச்சை கூட கிடைக்காது. தமிழ் படித்தது பிச்சை எடுப்பதை தவிர உயிர் வாழ ஒன்றுக்கும் பயன்படவில்லை. இதற்காக செலவிட்ட காலத்தை வேறு துறையில் செலவிட்டிருந்தால், வாழ்வில் பயன் ஏற்பட்டிருக்கும்" என்று தெரிவித்தார். இதற்கு அப்போது பெரும் கண்டனங்கள் எழுந்தது.

இதனை தான் தங்கச்சி என நிர்மலா சீதாராமனை குறிப்பிட்டு கமல்ஹாசன் பேசியதாக கூறப்படுகிறது.

இந்நிலையில், கமல்ஹாசன் பேச்சை ஒட்டி நிர்மலா சீதாராமனை விமர்சித்து சினேகன் வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார். அந்த வீடியோவில், "நேற்று மாநிலங்களவில் கமல்ஹாசன் ஆற்றிய உரை வரலாற்று சிறப்புமிக்க உரை. அந்த உரையை கேட்டதில் இருந்து வியந்து பொய் அந்த வியப்பில் இருந்து எழுபடாமலேயே இருக்கிறேன். நான் மட்டும் அல்ல, லட்சோப லட்ச மக்கள் வியந்து கொண்டும் புகழ்ந்துகொண்டும் இருக்கிறார்கள். எங்கிருந்து பேசினால் இந்த உலகத்தின் காதில் விழுமோ அங்கிருந்து பேசியிருக்கிறீர்கள்

## கமலின் பாராளுமன்ற பேச்சுக்கு வைரமுத்து புகழாரம்



**சென்னை, பிப்.06:**

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடர் தொடங்கி நடைபெற்று வருகிறது. இந்நிலையில் நேற்று குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் மக்கள் நீதி மய்யத் தலைவரும், எம்.பி-யுமான கமல்ஹாசன் உரையாற்றினார்.

மாநிலங்களவையில் ஆற்றிய முதல் உரையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றிக்கூறி தொடங்கிய அவர், ஆரம்பத்தில் ஆங்கிலத்தில் தொடர்ந்தார். கடைசியில் தமிழில் முடித்தார். தமிழில் அவர் பேசியது தற்போது கவனம் ஈர்த்துவருகிறது.

தமிழன் பிச்சை எடுக்க மாட்டான், அதுவும் உங்கள் பிச்சையை ஏற்கவே மாட்டான். தங்கச்சி,ஓட்டையும்,நாட்டையும் இந்த கமலஹாசன் விற்கவே மாட்டான். உங்கள் சாபங்களில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை. உங்களுக்கு இருக்கக்கூடும் என்ற நம்பிக்கையில், நீங்கள் உணர என் திட்டத்தை சாபமாய் போடுகிறேன், கருணையுடன் நீங்களே ஏற்பீர்" என்று தெரிவித்தார்.

இந்நிலையில், கமல்ஹாசனின் பாராளுமன்ற பேச்சை பாராட்டி வைரமுத்து தனது எக்ஸ் பக்கத்தில் கவிதை எழுதியுள்ளார்

அந்த பதிவில்,

"கமல்ஹாசன் எம்.பி அவர்களின் நாடாளுமன்ற உரைக்கு எனது பாராட்டும் அவர் பேசி அனுப்பிய விடையும்

அன்புள்ள கமல் எம்.பி அவர்களே!

கன்னிப் பேச்சல்ல; காளைப் பேச்சு

ஒரு தேசியவாதியின் மொழி ஆனால், தமிழச் சாதியின் குரல்

நாடாளுமன்றமே நிமிர்ந்து அமர்ந்தது தாடிச் சிங்கத்தின் தமிழ் கேட்டும்; ஆங்கிலம் கேட்டும்

என்னையறியாமல் மீசை முறுக்கின என் கட்டை விரலும் சுட்டு விரலும் காடு அதிரட்டும் களிறே பிளிறு" என்று தெரிவித்தார்.

## தி.மு.க.வில் இருந்து காங்கிரஸ் விரைவில் வெளியேறும்- பொள்ளாச்சி ஜெயராமன்

**அனுப்பர்பாளையம், பிப்.06:**

திருப்பூரில் இன்று அ.தி.மு.க. முன்னாள் துணை சபாநாயகர் பொள்ளாச்சி ஜெயராமன் எம்.எல்.ஏ., நிருபர்களிடம் கூறியதாவது:-

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிவுறுத்தலின் பேரில் வீடு, வீடாக சென்று விடியா ஆட்சிக்கு, உங்கள் வீட்டு பில்லே சாட்சி என்கிற பிரசார விளக்கக் கூட்டம் நடத்தி, தி.மு.க. ஆட்சியின் அவலங்களை தாய்மார்களிடம் எடுத்து கூறி வருகிறோம்.

கடந்த 5 ஆண்டுகளில் தி.மு.க., ஆட்சியில் விலைவாசி உயர்வால் ஒவ்வொரு குடும்பத்திற்கும் சுமார் ரூ.4 லட்சம் முதல் ரூ.5 லட்சம் வரை நஷ்டம் ஆகி உள்ளது. இந்த ஆட்சியில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாத நிலை உள்ளது.எங்கு பார்த்தாலும் கஞ்சா உள்ளிட்ட போதை பொருட்களின் புழக்கத்தால்



குழந்தைகளை பள்ளிக்கு அனுப்புவதற்கே பயமாக இருப்பதாக தாய்மார்கள் தெரிவிக்கிறார்கள். தேர்தல் வாக்குறுதிகள் எதையும் தி.மு.க., நிறைவேற்றவில்லை. மற்ற மாநிலங்களை விட தமிழ்நாட்டில் பெட்ரோல், டீசல் விலை அதிகமாக உள்ளது.

எங்கள் கூட்டணி, அ.தி.மு.க., தலைமையில் ஒற்றுமையாக, வலிமையாக உள்ளது. தி.மு.க., கூட்டணியில் இருந்து காங்கிரஸ் விரைவில் வெளியேறும். பின்னர் படிப்படியாக மற்ற கட்சிகளும் வெளியேறும். த.வெ.க. தலைவர் விஜய்க்கு ஒன்றும் தெரியாது என்றார்.

## ஊர்மெச்ச நடந்த காதணி விழா: 20 இரட்டை மாட்டு வண்டிகளில் 200க்கும் மேற்பட்ட சீர்வரிசை



**நிலக்கோட்டை, பிப்.06:**

திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை அருகே கொங்கபட்டி கிராமத்தில் பூ விவசாய குடும்பத்தைச் சேர்ந்த செந்தில்குமார்-மாலியபுரம் தம்பதியினருக்கு அஸ்வினி மற்றும் தாமோதரன் ஆகிய 2 குழந்தைகள் உள்ளனர். தாய் மாலியபுரம் உடன் பிறந்த சகோதரர் வேல்முருகன், தனது சகோதரி குழந்தைகளுக்கு காதணி விழா செய்வதற்காக 200-க்கும் மேற்பட்ட சீர்வரிசை பொருட்களுடன் எ.காமாட்சிபுரத்திலிருந்து எ.கொங்கப்பட்டி கிராமத்திற்கு சுமார் 4 கி.மீ. தூரம் 20-க்கும் மேற்பட்ட இரட்டை மாட்டு வண்டிகளில் ஊர்வலமாக சீர்வரிசை பொருட்களுடன் ஊர்மெச்ச காதணி விழா நடத்தியுள்ளார்.

இருசக்கர வாகனத்தை இரட்டை மாட்டு வண்டியில் ஏற்றி தனது அக்காள் கணவருக்கு அன்பளிப்பாக வழங்கினார். மேலும் இரட்டை சீர் என்று சொல்லக்கூடிய பித்தளை பானை, அண்டா, பித்தளை குடங்கள் உள்ளிட்ட வீட்டு உபயோக பொருட்கள் அனைத்தும் இரட்டை எண்ணிக்கையில் சீராகவும், உப்பு, மிளகாய், மஞ்சள் பொடி, இரட்டை மாலை, இனிப்பு, கார வகைகள் என அனைத்தும் பாரம்பரியம் மாறாமல் சீர்வரிசையாக கொண்டு வந்தார்.

தப்பாட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம், கரகாட்டம், பொய்க்கால் குதிரை உள்ளிட்ட பல்வேறு தமிழர் கலைகளுடன் தாரை தப்பட்டை, வான வேடிக்கை சகிதம் ஆட்டுக்கிடாய், வெள்ளி பாத்திரங்களுடன் காதணி விழா சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பெண் குழந்தையான அஸ்வினிக்கு 5 பவுனில் தோடு அணிவித்துள்ளார். நிறைவாக சம்பிரதாயப்படி அசைவ விருந்து வழங்கப்பட்டு மொய் வாங்கப்பட்டு காதணிவிழா நடைபெற்றது.

சொந்த பந்தங்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.


FREE MARRIAGE
INFORMATION CENTER :
இலவச திருமண
தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889


FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME
PREMA ENTERPRISES
DO YOU WANT TO
BUY
OR
SELL
PROPERTY OR LAND?
+91 9884417843


Vilambaram
We
provide
Targeted Leads
to grow your
buisness
Boost
your
business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com


THINKING to BUY / SELL / RENT
a PROPERTY
New / Resale ...
Residential / Commercial ...
Plots Flats House
Villa Bungalows
Farm Land Ware Houses
Factory Sites Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call :7871617005


CUSTOMIZED
MLM SOFTWARE
STARTS WITH
Rs.9999*
ONLY
BINARY PLAN
GENERATION PLAN
SINGLE LEG PLAN
MATRIX PLAN
CRYPTOCURRENCY
CONTACT
9445242169


Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the
LEADS GENERATION
FACTORY
For Your
REAL ESTATE
BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 % OFF SPECIAL OFFER DISCOUNT
90 DAYS MONEY BACK GUARANTEE


Vilambaram
WE HELP YOU TO
BOOST
YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM CONTACT: 8122798599


Get Free Jobs Alert on Your
WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address
on Above Number
Josh Jobs Team Give u Daily Update of
Govt. as Well as Private Jobs


ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTRIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St.,
Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601


just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary
Unilevel
Matrix
Board
Generation
ROI / Investment
ONLY
Rs. 499
Website:
just499.com
Phone/WhatsApp:
7789951009
Email:
orderjust499@gmail.com


Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை
பொருள்களை குறைந்த விலையில்
நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


SADHANA DEVI.K
CAR WASH
SUPREME
Car Wash
& Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.


Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500
per day
Work From Home
Jobs
Ananda Bhaskar
Rs 8000 – Rs 15000
per month
9337501889
7789941009


அருள்தரும்
தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
www.arultharumdeivam.com
அற்புதமான
ஆன்மீக செய்திகள்,
பரிகாரங்கள்,
ஸ்தல வரலாறு மற்றும்
சுவாரஸ்யமான
தகவல்கள் மாதம்
இருமுறை படித்து
ஆன்மீகத்தை
அறியுங்கள்..


S.R
Call Drivers
Travels
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49,E.H.Road,Cornation Nagar,K.Pet,Ch-21.



Breaking NEWS Card.com
www.breakingnewscard.com
BREAKING NEWS
We Create Professional
Breaking News Cards
Daily 4 Cards Plus
get News Portal FREE
Call: 7789951009
999 ONLY


ADVERTISE
WITH US
CONTACT US
9438610756


Low Cost Matrimony Website
999 SITE
MATRIMONY
WEBSITE
RS.999/-
Call/Whatsapp - +91 7789951009

# கவிதை அரங்கம்!






பின்னால் பேசுபவர்கள்
புகழ்ந்து பேசினால் என்ன
இகழ்ந்து பேசினால் என்ன
காதில் வாங்காமல் அடுத்த
அடி எடுத்து வைத்து
முன்னேறிக் கொண்டே
இரு

கஷ்டங்கள் பெரியவை
என்று கடவுளிடம்
சொல்லாதீர்கள் மாறாக
கஷ்டங்களை கடந்து
தைரியம் உயர்ந்தது
என்று சொல்லுங்கள்

எல்லாம் போய்விட்டாலும்
வலிமையான
உள்ளமிருந்தால்
உலகத்தையே
கைப்பற்றலாம்

தவறி விழுந்த விதையே
முளைக்கும் போது
தடுமாறி விழுந்த
நம் வாழ்க்கை மட்டும்
சிறக்காதா?

# வாழ்க்கை தத்துவம்...



தோல்வி வந்து
கசக்கும்போது தான்
வெற்றிக்கு வேண்டிய
உறுதி உண்டாகிறது

அழகான வாழ்க்கை
என்பது இல்லை
அர்த்தமுள்ள வாழ்க்கை தான்
உண்மையான வெற்றி

அமைதியான நடைதான்
வாழ்க்கையின் மிக நீண்ட
பாதையை கடந்துசெல்லும்

தொடர்ந்த முயற்சி என்பது
விதை மாதிரி
நாள் ஒன்றில் பூத்திடும்

நேர்காணலில் தோல்வி பெற்றவர்கள்
வாழ்வில் புத்திசாலிகள் ஆகிறார்கள்

# பாட்டியும் பேத்தியும்!



" கொழந்தே....அடி சச்சு !"

கல்லூரிக்கு புறப்பட தயாராக இருந்த சரஸ்வதி பாட்டியின் அழைப்பால் கடுப்படைந்தாள். விடு விடுவென்று அவர் இருந்த அறைக்குள் நுழைந் தாள்.

" பாட்டி ! உங்கக்கிட்ட எத்தன தடவை சொல்லியிருக்கேன் கொழந்தே கொ ழந்தேன்னு கூப்பிடாதீங்கன்னு ! நான் காலேஜ் படிக்கிறேன். என்னைப் போய் கொழந்தேன்னு கூப்பிடறேள்! அதோட என் பேர் சரஸ்வதி. அதை வேற மொட்டையா ' சச்சு'ன்னு உச்சரி க்கிறேள் ? ஏன் இப்படி பண்றேள்?"

" கோபிச்சுக்காதடி கொழந்தே! பாட்டி தானே ஆசையா கூப்பிடறதா நெனை ச்சுக்கோ"

பாட்டியை முறைப்பாகப் பார்த்தவள்,
" சரி. எதுக்கு கூப்பிட்டேள் ? சீக்கிரம் சொல்லுங்கோ. எனக்கு காலேஜுக்கு நாழிகை ஆயிடுத்து !" பட படத்தாள்.

" ம்..வந்து..." பாட்டி இழுக்க சரஸ்வதி பொறுமை இழந்தாள்.

" சரி, யோசிச்சு வைங்க. சாயந்தரம் பேசலாம். " என்று கூறி நகரும் நேரம் பாட்டிக்கு அந்த விஷயம் நியாபகம் வந்தது.

" இருடி, றெக்கை கட்டிண்டு பறக் கறே.." என்றவர் தொடர்ந்தார். " அந்த சீமாச்சு இல்ல..."

" எந்த சீமாச்சு ?"

" அதாண்டி, சொஸைட்டியில வேலை செய்றானே, எதிராத்து சீமாச்சு !"

" சரி, அவருக்கென்ன?"

" அவனுக்கு தலைச்சன் பிள்ளக் கொ ந்த பொறந்திருக்குதோல்லியோ?"

" ஆமாம்."

" அதுக்கு என்னம்மோ சர்டிஃபிகேட்.. ஆங்..டெத் சர்டிஃபிகேட் வாங்கிட் டானோ , ஒனக்குக் தெரியுமா?"

" ஆமாம் கொழந்த பொறந்தா டெத் சர் டிஃபிகேட் வாங்கணும்.. யாராவது போனா பர்த் சர்டிஃபிகேட் வாங்க ணும்.ஏன் பாட்டி இப்படி உளர்றேள் ?"

" ஏண்டி ஏதோ தெரியாம கேட்டுட் டேன். அதுக்கு ஏன் இப்படி சலிச்சுக் கறே?"

" அதுக்கு நீங்க தமிழ்லயே கேட்டிருக்க லாமே ?"

" சரி..பிரசவ சர்டிஃபிகேட் வாங்கிட் டானா ?"

" சரிதான் மறுபடியும் உளர்றேள்.அது க்கு பிறப்புச் சான்றிதழ்னு பேர் ! பிர சவ சான்றிதழ் இல்லே !"

" சரி. அதான் வாங்கிட்டானா ?"

பாட்டியின் அருகில் சென்ற சரஸ்வதி தன் வலது கையை இடுப்பு மீது வைத் துக்கொண்டு கோபமாக பார்த்தாள்.

" ஏண்டி இப்படி கோபமா முறைக்கி றே ? நான் அப்படி என்ன கேட்கக் கூடாதத கேட்டுட்டேன் ?"

" தெரியாமத்தான் கேட்கறேன். வயசான காலத்துல இது உங்களு க்குத் தேவைதானா?உள் நாட்டு விவ காரமே நிறைய இருக்கு. அயல் நாட்டு விவகாரம் எதுக்கு உங்களுக்கு ! மத்தவா விஷயத்தில மூக்கை நீட்டாம அக்கடான்னு இருங்க !" சொல்லிவி ட்டு சரஸ்வதி விரைவாக அங்கிருந்து அகன்றாள்.

" அட ராமா ! இப்படி விவாதம் செஞ்சு ட்டு பதிலே சொல்லாம போறதே இந்தப் பொண்ணு ! சரிதான், இந்தா த்துல நான் சுதந்திரமா வாயத் தொ றந்து பேசக் கூட எனக்கு உரிமையி ல்லாம போயிடுத்து! ஹும்.. எல்லாம் கலிகாலம்."

பாட்டியின் முணு முணுப்பு காதில் விழ சிரித்துக் கொண்டாள் சரஸ்வதி.

**வி.கே. லக்ஷ்மிநாராயணன்**

# சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



*போடா, நீ முட்டாள் !*

*குமாஸ்தா : போடா, நீ முட்டாள் !*

*டைப்பிஸ்ட்: போடா, நீ தான் முட்டாள் !*

*மேனேஜர்: என்ன அங்கே கூச்சல்? நான் ஒருத்தன் இங்கே இருப்பது உங்களுக்கு தெரியலையா ?*



# தினம் ஒரு சமையல்



## ஹைதராபாத் ஸ்டைல் புதினா சட்னி

**தேவையான பொருட்கள்:**

| | |
|---|---|
| பழுத்த தக்காளி | - 4 |
| புதினா இலை | - ஒரு கைப்பிடி |
| எள் | - 3 டேபிள் ஸ்பூன் |
| பச்சை மிளகாய் | - 8 |
| பூண்டுப் பல் | - 15 |
| சீரகம் | - 1 ஸ்பூன் |
| புளி | - நெல்லிக்காய் அளவு |
| உப்பு | - தேவையான அளவு |

**தாளிக்க:**

| | |
|---|---|
| எண்ணெய் | - 1 ஸ்பூன் |
| கடுகு | - 1 ஸ்பூன் |
| கடலைப் பருப்பு | - 1 டேபிள் ஸ்பூன் |
| உளுத்தம் பருப்பு | - 1 டேபிள் ஸ்பூன் |
| சீரகம் | - 1 டேபிள் ஸ்பூன் |

**செய்முறை:**



- முதலில் ஒரு கடாயில் எண்ணெய் சேர்க்காமல் எள்ளை வறுக்கவும். எள் வெடித்து நிறம் மாறியதும் அதை ஆறவைத்து பொடியாக அரைத்து தனியாக வைத்துக் கொள்ளவும்.
- அதே கடாயில் எண்ணெயை ஊற்றி சூடாக்கி, அதில் நறுக்கிய பச்சை மிளகாய், சீரகம் மற்றும் பூண்டு சேர்த்து 2 நிமிடங்கள் வதக்கவும்.
- அதன்பின் நறுக்கிய தக்காளி, உப்பு மற்றும் புளி சேர்த்து வதக்கவும். தக்காளியின் தோல் சுருங்கி நன்கு குழையும் வரை வேக வைக்கவும்.

ஆந்திரா ஸ்டைல் பச்சை மிளகாய் சட்னி ரெசிபி... இந்த மாதிரி செய்யுங்க... 1 மாசம் வைச்சு சாப்பிடலாம்...!ஆந்திரா ஸ்டைல் பச்சை மிளகாய் சட்னி ரெசிபி... இந்த மாதிரி செய்யுங்க... 1 மாசம் வைச்சு சாப்பிடலாம்...!

- இந்த நிலையில் புதினாவை சேர்த்து புதினா நன்கு சுருங்கும் வரை வதக்கி அடுப்பிலிருந்து இறக்கி விடவும்.
- ஆறிய தக்காளியை சிறிது தண்ணீர் சேர்த்து கொரகொரப்பாக அரைக்கவும்.
- சட்னியை தாளிக்க ஒரு கடாயில் எண்ணெயை ஊற்றி சூடாக்கி கடுகை போட்டு தாளிக்கவும்.
- கடுகு வெடித்ததும் கடலைப்பருப்பு, உளுத்தம்பருப்பு சேர்த்து, அவை பொன்னிறமாகும் வரை வறுக்கவும்.
- இந்த நிலையில் தக்காளி விழுது மற்றும் அரைத்த எள் பொடியைச் சேர்த்து, எண்ணெய் பிரிந்து வரும் வரை வதக்கி, பின்னர் அடுப்பிலிருந்து இறக்கி விடவும்.
- அவ்வளவுதான் சூப்பரான ஹைதராபாத் ஸ்டைல் புதினா சட்னி ரெடி. இதை சூடான இட்லி, தோசையுடன் பரிமாறவும்.

# பேரரத்தை பயன்கள்



அரத்தை பல நூற்றாண்டுகளாக இந்திய மருத்துவத்தில் சிறப்பிடம் பெற்று வந்துள்ளது. குடும்ப வைத்திய முறையிலும் அரத்தை மிக உயர்ந்த இடத்தை வகிக்கின்றது. வேர்க்கிழங்குகளே அதிகமாக மருத்துவத்தில் பயன்படுபவை. அரத்தை வேர்கிழங்குள் காரச் சுவையும், வெப்பத் தன்மையும், கொண்டவை. முடக்குவாதம், சிறுவர்களுக்கான சுவாச நோய்கள், வாத நோய்கள், குடல் வாயு, தொண்டை நோய்களைக் கட்டுப்படுத்த உபயோகமாகின்றது. மேலும், வயிற்று நோய்களுக்கு மருந்தாகவும், கிருமிநாசினியாகவும், குடல் புழுக்களை வெளியேற்றுதற்கும் பயன்படுகின்றது. அரத்தை செடி வகையைச் சார்ந்தது; 2மீ வரை உயரமாக வளரக்கூடியது. அரத்தை இலைகள் நீளமானவை, அகலத்தில் குறுகியவை, மேல்பக்கம் அடர்த்தியான பச்சையாகவும், கீழ்ப்பக்கம் சாம்பல் பச்சையாகவும், ஓரங்கள் வெண்மையாகவும் காணப்படும். இலையின் நடுநரம்பு வலிமையானது.அரத்தை மலர்கள் 3 செ.மீ. வரை நீளமானவை. பச்சை கலந்த வெண்மை நிறமானவை, தொகுப்பானவை. பழங்கள் சிறியவை, ஆரஞ்சு கலந்த சிவப்பு நிறமானவை. பூ இதழ் வெண்மையாக, சிவந்த கீற்றுகளுடன் காணப்படும். அரத்தை வேர்க்கிழங்குகள் மணமுள்ளவை.

அரத்தை இயற்கையாக மேற்குத் தொடர்ச்சி மலைகள் மற்றும் இமயமலையின் கிழக்குச் சரிவுகளில் விளைகின்றது. இந்தியா முழுவதும் பயிர் செய்யப்படுகின்றது. அரத்தை பேரரத்தை, காலங்கல் மற்றும் தும்ரஷ்டகம் ஆகிய பெயர்களிலும் வழங்கப்படுகிறது.

# லெஜண்ட் சரவணனின் புதிய படத்தின் முதல் TITLE GLIMPSE




தமிழகத்தில் முன்னணி தொழிலதிபராக இருப்பவர் லெஜண்ட் சரவணன்.

தொழிலதிபர்கள் தங்களது கடை விளம்பரங்களில் நடிகைகளை தான் நடிக்க வைப்பார்கள், ஆனால் தனது கடை விளம்பரங்களில் இவரே நடிக்க களமிறங்கினார், மக்களிடம் வரவேற்பும் பெற்றார்.

இவருக்கு சினிமாவில் நடிக்க ஆசை வர கடந்த 2022ம் ஆண்டு தி லெஜண்ட் திரைப்படத்தின் மூலம் ஹீரோவாக அறிமுகமானார். அப்படம் வெற்றியடைய இப்போது லெஜண்ட் சரவணன் நடிப்பில் 2வது படம் தயாராகி வருகிறது.


லீடர் என பெயரிடப்பட்டுள்ள இப்படத்தின் முதல் TITLE GLIMPSE இதோ,






சேலையிலும் தாராள கவர்ச்சி காட்டி அவர் எடுத்து இருக்கும் போட்டோஷூட் ஸ்டில்கள் ரசிகர்களை கவர்ந்து வருகிறது. இதோ பாருங்க.

# ராஷ்மிகா மந்தனா - விஜய் தேவரகொண்டா விரைவில் திருமணம்? சொத்து மதிப்பு குறித்து உலா வரும் தகவல்..



நடிகை ராஷ்மிகா மந்தனா மற்றும் நடிகர் விஜய் தேவரகொண்டா காதலித்து வருவதை ரசிகர்கள் அறிவார்கள். ஆனால், இதுகுறித்து இருவரும் இதுவரை அதிகாரப்பூர்வமாக அறிவிக்கவில்லை.

வருகிற பிப்ரவரி 26ஆம் தேதி உதய்பூரில் மிகவும் விமரிசையாக இவர்களுடைய திருமணம் நடைபெறவுள்ளது என கூறப்படுகிறது. தொடர்ந்து இவர்களுடைய திருமண செய்தி வெளிவரும் நிலையில், இரு தரப்பில் இருந்தும் எந்த ஒரு மறுப்பும் தெரிவிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ராஷ்மிகா - விஜய் தேவரகொண்டா திருமண செய்திகள் ஒரு பக்கம் உலா வர, மறுபக்கம் இவர்களுடைய சொத்து மதிப்பு குறித்து தகவல்கள் உலா வருகின்றன.

இந்திய அளவில் முன்னணி நடிகையாக வலம் வரும் ராஷ்மிகா மந்தனாவின் சொத்து மதிப்பு ரூ. 66 கோடி என்றும், நடிகர் விஜய் தேவரகொண்டாவின் சொத்து மதிப்பு ரூ. 50 முதல் ரூ. 70 கோடி இருக்கும் என்றும் கூறப்படுகிறது. ஆனால், இது அதிகாரப்பூர்வமான தகவல் இல்லை.

# ஆவணி மாத சிறப்புக்கள்



ஆடிமாதம் முடிந்து தமிழ் வருடத்தின் ஐந்தாவது மாதமான ஆவணி மாதத்தின் சிறப்புகள் மற்றும் நன்மைகளை காண்போம் .

ஆடி போய் ஆவணி வந்தால் நன்மைகள் தேடி வரும் என்பார்கள் ஆவணியில் அத்தனை நாட்களும் மங்கல நாட்களே என்பது ஆன்றோர் வாக்கு. சூரியன் சிம்ம ராசியில் சஞ்சரிக்கும் மாதமே ஆவணி மாதம் அல்லது சிம்ம மாதம் எனப்படும். சிங்க மாதம் எனவும் கூறுவர்.

சூரியன் சிம்ம ராசியில் வலுப்பெறும் இந்த மாதத்தில் எதைச் செய்தாலும் அது மிகுந்த பலனைத் தரும். தமிழ் வருடத்தின் ஐந்தாவது மாதமாக வரும் இம்மாதம் கேரளத்தில் வருஷத்தின் முதல் மாதமாகும். திருவோணத்தன்று பௌர்ணமி வருவதால் இது சிரவண மாதம் என்றும் அழைக்கப்படும்.

இந்த ஆவணி மாதத்தில் மூன்று தெய்வங்களின் அவதார நன்னாள் வருகிறது.
ஆவணி மாதத்தில் வரும் வளர்பிறை சதுர்த்தி அன்று முழு முதற்கடவுள் விநாயகர் அவதரித்தார். இது இந்தியா முழுவதும் சிறப்பாகக் கொண்டாடப்படும் ஒரு பண்டிகையாகும். களிமண்ணால் பிள்ளையார் செய்து, பூஜையின் போது தேங்காய், பழங்கள், அவல், பொறி, அப்பம், கொழுக்கட்டை முதலியவற்றை நிவேதனகமாகப் படைத்து வழிபடுவர். மூன்று நாட்கள் கழித்து மண்ணால் ஆன விநாயகரை நீர் நிலைகளில் கரைப்பதுடன் விழா நிறைவு பெறும்.

அந்த மூன்று நாட்களும் பஜனை, பூஜை போன்றவை நடைபெறும். விநாயகர் சதுர்த்திக்கு முன்பு வரும் தேய்பிறை சதுர்த்தி மகா சங்கடஹர சதுர்த்தி என்று அழைக்கப்படும் யானை முகமும் பானை வயிறும் கொண்ட விநாயகரை பிடிக்காதவர்கள் உண்டோ? விக்னம் தீர்ப்பவன் விநாயகன் அல்லவா!

எந்த ஒரு காரியத்தை துவங்கும் போதும் கணபதிக்கு முதலில் பூஜை செய்வது வழக்கம் விநாயகரை பூஜித்தால் விக்னம் இல்லாமல் அந்த காரியம் நிறைவேறும் என்பது ஐதீகம்.

மகாபாரதத்தை எழுதுவதற்காக தனது தந்தத்தையே உடைத்து வெளித்தோற்றத்தை விட அறிவுக்கு முக்கியத்துவம் தர வேண்டும் என்பதையும், எடுத்த காரியத்தைச் சிரத்தையுடன் செய்ய வேண்டும் என்பதையும் உணர்த்தியவர் விநாயகப் பெருமான்.

இவர் கணங்களின் அதிபதியாதலால் கணபதி என்று அழைக்கப்படுகிறார்.

நம் அனைவருக்கும் பிடித்த மாயக்கண்ணன் ஆவணி மாதம் தேய்பிறையில் அஷ்டமியில் ரோகினி நட்சத்திரம் கூடிய நாளில் தேவகிக்கும் வசுதேவருக்கும் மகனாக அவதரித்தார். பிறந்தவுடன் சங்கு சக்கரங்களுடன் பெற்றோருக்கு காட்சியளித்த கண்ணன் தன் மாயையால் கோகுலம் சென்று அங்கு வளர்ந்தார்.
நம் இகபர வாழ்க்கைக்கு தேவையான விஷயங்களை கீதோபதேசம் மூலம் எடுத்துக் கூறியவர் அவரே.

இந்த உலகத்தின் குரு கீதையின் முடிவில் அவர் "யதா யதாஹி தர்மஸ்ய க்லானிர் பவதி பாரத அப்யுத்தானம தர்மஸ்ய ததாத்மானம் ஸ்ருஜாம்யகம்" என்று கூறுகிறார்.
எப்பொழுதெல்லாம் அதர்மம் தலை தூக்கி ஆதிக்கம் செலுத்துகிறதோ அப்பொழுதெல்லாம் தான் அதனை அழிக்க அவதாரம் எடுப்பதாக் கிருஷ்ணன் கூறுகிறார்.

வாமனனாக வந்து மகாபலியிடம் மூன்றடி மண் கேட்டு, திரிவிக்கிரமனாக உலகளந்தது ஆவணி மாதத் திருவோணத்தன்று. அன்று கேரளத்தில் ஓணம் பண்டிகை சிறப்பாக கொண்டாடப்படும். மகாபலிச் சக்கரவர்த்தி தனது மக்களைப் பார்க்க வருவதாக ஐதீகம். மக்கள் புத்தாடை அணிந்து, ஓணசத்ய என்னும் விருந்துணவுடன் சந்தோஷத்துடன் கொண்டாடுவர். இப்பண்டிகை பத்து நாட்கள், அதாவது ஹஸ்த நட்சத்திரத்தில் தொடங்கி திருவோணம் வரையில் சிறப்பாக கொண்டாடப்படும்.

இந்த மாதத்தில் வரும் மூலம் நட்சத்திரம் மிகவும் சிறப்பு வாய்ந்தது மாணிக்கவாசகர்காக சிவபெருமான் நரியை பரியாக்கிய திருவிளையாடல் ஆவணி மாதம் வரும் மூல நட்சத்திரத்தன்று நடந்தது.

ஆவணி மாதம் வரும் ஞாயிற்றுக்கிழமைகள் மிகவும் சிறப்பு வாய்ந்தது அன்று சூரியனை வணங்கி விரதம் இருந்தால், சூரிய பகவானின் அருளைப் பரிபூரணமாகப் பெறலாம். கண் நோய்கள் குணமாகும்.

ஆவணியில் வரும் அவிட்டம் மிகவும் சிறப்பு வாய்ந்தது அன்று வேதங்கள் கற்க அவை நன்கு விருத்தியாகும். இதை ஆவணி அவிட்டமாகக் கொண்டாடுவார்கள். அதற்கு மறுநாள் காயத்ரி ஜெபம் சாமவேதிகளுக்கு ஆவணி அவிட்டம் ஹஸ்த நட்சத்திரத்தன்று வரும்.

ஆவணியில் வரும் வளர்பிறை ஏகாதசி புத்திரதா ஏகாதசி என்றும், தேய்பிறை ஏகாதசி காமிகா ஏகாதசி என்றும் அழைக்கப்படும்.

சுக்ல பட்சத்தில் வரும் ஏகாதசி அன்று வரலட்சுமி விரதம் கொண்டாடப்படும். வரலட்சுமியைத் தங்கள் இல்லங்களில் எழுந்தருள செய்து, சிறப்பு பூஜைகள், நைவேத்தியங்கள் செய்து வழிபடுவர்.

இந்த பூஜையின் மூலம் மன நிம்மதி, குழந்தை பாக்கியம், செல்வம் அனைத்தும் கிடைக்கும். தென்னக மாநிலங்களான ஆந்திரா, கர்நாடகா போன்றவற்றில் சிறப்பாக கொண்டாடப்படும். சுமங்கலிப் பெண்களுக்கு தக்ஷிணாதாம்பூலம் கொடுப்பார்கள்.
கிரகப்பிரவேசம், திருமணம் போன்ற அனைத்து நல்ல விசேஷங்களுக்கும் உகந்த இந்த மாதத்தில் திருமணம் செய்தால் வாழ்க்கை இன்பமாக அமையும் என்பது நம்பிக்கை.
இம்மாதத்தில் விவசாயப் பணிகளை மேற்கொண்டால் பயிர்கள் நன்கு செழித்து வளரும் என்பர் முன்னோர்.

மங்களங்கள் சேரும் இந்த மாதத்தில் இறைவனை வழிபட்டு மன மகிழ்ச்சியோடு வாழ்வோம்.



அலமேலு ரங்கராஜன்
ஸ்ரீவல்லிப்புத்தூர்

## தினம் ஒரு தலைவர்கள்

# பீரா சுரேந்திர சாய் வரலாறு

பீரா சுரேந்திர சாய் (23 ஜனவரி 1809 – 28 பிப்ரவரி 1884) தற்போதைய ஒடிசாவைச் சேர்ந்த ஒரு இந்திய புரட்சியாளரும் சுதந்திரப் போராட்ட வீரரும் ஆவார். சம்பல்பூர் மாநிலத்தின் ஆட்சியாளர்களை அரியணையிலிருந்து இறக்கிய பின்னர், இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்துப் போராடினார் .

பீரா சுரேந்திர சாய் மற்றும் அவரது கூட்டாளிகளான மாதோ சிங் , குஞ்சல் சிங், ஐரி சிங், பைரி சிங், உத்தந்த் சாய், உஜ்ஜல் சாய், ககேஸ்வர் தாவோ, கருணாகர் சிங் , சலேக்ராம் பாரிஹா, கோபிந்தா சிங், பஹார் சிங், ராஜீ காசியா, கமல் சிங், ஹாதி சிங், சாலிக் ராம் பாரிஹா, லோக்நாத் பாண்டா/காடியா, மிருதுஞ்சய பாணிக்ராஹி, ஜகபந்து ஹோட்டா, பத்மநாப குரு, திரிலோச்சன் பாணிக்ராஹி மற்றும் பலர் இந்தியாவில் பிரிட்டிஷ் காலனித்துவ விரிவாக்கத்தை எதிர்த்து ஒன்றாகவும் தனித்தனியாகவும் பணியாற்றினர், இதனால் பிரிட்டிஷ் அதிகாரிகள் மேற்கு ஒடிசா பிராந்தியத்தின் பெரும்பகுதியை கணிசமான காலத்திற்கு கட்டுப்பாட்டில் எடுத்துக்கொள்வதைத் தடுத்தனர். அவர்களில் பலர் காலனித்துவ அதிகாரிகளால் விசாரிக்கப்பட்டு தூக்கிலிடப்பட்டனர்; ஹட்டே சிங் அந்தமானில் உள்ள செல்லுலார் சிறையில் (காலா பானி என்றும் அழைக்கப்படுகிறது) இறந்தார் . சம்பல்பூர் சிங்கம் வீர் சுரேந்திர சாய் 1884 பிப்ரவரி 28 அன்று ஆசிர்கர் சிறையில் இறந்தார்.

ஆரம்பகால வாழ்க்கை மற்றும் பின்னணி
சாய் 1809 ஜனவரி 23 ஆம் தேதி ஒடிசாவின் சம்பல்பூருக்கு வடக்கே சுமார் 40 கி.மீ தொலைவில் உள்ள கிண்டா என்ற சிறிய கிராமத்தில் பிறந்தார் . அவர் தர்ம சிங்கின் ஏழு குழந்தைகளில் ஒருவராகவும், சம்பல்பூர் மாநிலத்தின் ஆளும் குலத்தைச் சேர்ந்தவர் . அவர் சௌஹான் வம்சத்தின் நான்காவது மன்னரான மாதேகர சாயின் மகனான அனிருத சாயால் தொடங்கப்பட்ட கிளையைச் சேர்ந்தவர்.

அரியணைக்கு நடிப்பவர்
சம்பல்பூரின் கடைசி மகாராஜாவான மகாராஜ் சாய், சௌஹான் வம்சத்தைச் சேர்ந்தவர். இந்த வம்சத்தில் பல உறுப்பினர்களும் பல கிளைகளும் இருந்தன. சம்பல்பூரில், மகாராஜா ஒரு ஆணாக மட்டுமே இருக்க முடியும், மேலும் மகாராஜ் சாய்க்கு மகன்கள் இல்லாததால், அவர் சுரேந்திர சாயை தனது சட்டப்பூர்வ வாரிசாகத் தேர்ந்தெடுத்தார். சுரேந்திர சாய் பல ஆண்டுகளுக்கு முன்பு சம்பல்பூரை ஆண்ட மகாராஜா மதுக்கரின் சகோதரர் இளவரசர் அனிருத்த சாயின் வழித்தோன்றல் ஆவார். இருப்பினும், சுரேந்திர சாய் முழுமையான சுதந்திர நிர்வாகத்தை விரும்பியதாலும், ஆங்கிலேயர்களுடன் எந்த வகையிலும் இணைந்திருக்க விரும்பாததாலும் இந்தக் கோரிக்கையை ஆங்கிலேயர்கள் நிராகரித்தனர்.

அரியணைக்கான கிளர்ச்சி
1827 ஆம் ஆண்டில் சம்பல்பூரின் ஆட்சியாளரான ராஜா மகாராஜா சாய், வாரிசு இல்லாமல் இறந்தார். பிரிட்டிஷ் அரசாங்கம் தனது விதவை ராணி மோகன் குமாரியை மாநிலத்தின் ஆட்சியாளராக நியமித்தது. இது ஆண் ஆட்சியாளர்கள் மட்டுமே மக்களால்





ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்ற நிறுவப்பட்ட விதிமுறைகளுக்கு முரணானது. இதன் விளைவாக, கலவரங்கள் வெடித்தன, மேலும் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சியாளருக்கும் சம்பல்பூரின் சிம்மாசனத்திற்கு உரிமை கோருபவர்களுக்கும் இடையே மோதல் அதிகரித்தது.
ஆளும் குலத்தின் வழித்தோன்றல்களில் ஒருவரான சுரேந்திர சாய், மிக முக்கியமான உரிமையைக் கொண்டிருந்தார்.
காலப்போக்கில் ராணி மோகன் குமாரி பிரபலமடையவில்லை. அவரது நில வருவாய் கொள்கை, ஆங்கிலேயர்களிடம் அதிகாரம் இழக்க நேரிடும் என்று சந்தேகித்த கோண்ட் மற்றும் பிஞ்சால் பழங்குடி ஜமீன்தார்களையும் குடிமக்களையும் திருப்திப்படுத்தவில்லை. பிரிட்டிஷ் அதிகாரிகள் ராணி மோகன் குமாரியை அதிகாரத்திலிருந்து நீக்கி, அரச குடும்பத்தைச் சேர்ந்த ஆனால் குறைந்த சாதியைச் சேர்ந்த நாராயண் சிங்கை சம்பல்பூரின் மன்னராக நியமித்தனர். சுரேந்திர சாயின் வாரிசுரிமைக்கான கோரிக்கையை பிரிட்டிஷ் அரசாங்கம் புறக்கணித்தது. நாராயண் சிங்கின் ஆட்சியில் கிளர்ச்சி வெடித்தது.
சுரேந்திர சாயும் அவரது நெருங்கிய கூட்டாளிகளான கோண்ட் ஜமீன்தார்கள் பல தொந்தரவுகளை உருவாக்கினர். பிரிட்டிஷ் துருப்புக்களுடன் நடந்த மோதலில் சுரேந்திர சாய், அவரது சகோதரர் உத்யந்த சாய் மற்றும் அவரது மாமா பலராம் சிங் ஆகியோர் கைது செய்யப்பட்டு ஹசாரிபாக் சிறைக்கு அனுப்பப்பட்டனர் , அங்கு பலராம் சிங் இறந்தார். மன்னர் நாராயண் சிங் 1849 இல் இறந்தார். நாராயண் சிங்கிற்குப் பிறகு ஆண் வாரிசு இல்லாததால் , டல்ஹவுசி பிரபு 1849 இல் சம்பல்பூரை இணைத்தார். 1857 ஆம் ஆண்டு எழுச்சியின் போது சிப்பாய்கள் சுரேந்திர சாயையும் அவரது சகோதரர் உத்யந்த சாயையும் விடுவித்தனர். சுரேந்திர சாயின் தலைமையில் சம்பல்பூரில் ஆங்கிலேயர்களுக்கு எதிரான எதிர்ப்பு தொடர்ந்தது. அவருக்கு அவரது சகோதரர்கள், மகன்கள், உறவினர்கள் மற்றும் சில ஜமீன்தார்கள் ஆதரவு அளித்தனர் .

எழுச்சி
சாய் 1827 ஆம் ஆண்டு தனது 18 வயதில் ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் போராடத் தொடங்கினார். 1840 ஆம் ஆண்டு முதல் முறையாக அவர் கைது செய்யப்பட்டு ஹசாரிபாக் சிறைக்கு அனுப்பப்பட்டார். 1857 கிளர்ச்சியின் போது போராளிகளால் அவர் ஹசாரிபாக் சிறையிலிருந்து தப்பினார். அவர் தனது நடவடிக்கைகளை ஒடிசாவின் மலைப்பாங்கான பகுதிகளுக்கு நகர்த்தி, 1862 இல் சரணடையும் வரை எதிர்ப்பைத் தொடர்ந்தார். சரணடைவதற்கு முன்பு அவர் ஹசாரிபாக்கில் 17 ஆண்டுகள் சிறையில் கழித்தார், இறுதிக் கைதுக்குப் பிறகு அவர் இறக்கும் வரை தொலைதூர ஆசிர்கர் மலைக்கோட்டையில் 19 ஆண்டுகள் காவலில் வைக்கப்பட்டது உட்பட 20 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்தார்.

அவரை அடக்குவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் 1857 ஆம் ஆண்டு இந்தியக் கலகம் 1858 ஆம் ஆண்டின் இறுதியில் சரிந்தது, இந்தியா முழுவதும் ஆங்கிலேயர்களால் சட்டம் ஒழுங்கு மீட்டெடுக்கப்பட்டது , ஆனால் அவர் தனது புரட்சியைத் தொடர்ந்தார். ஆங்கிலேயர்களின் இராணுவ வளங்கள் அவருக்கு எதிராகத் தூண்டப்பட்டன, மேலும் இந்தியாவின் பிற இடங்களில் கிளர்ச்சியை அடக்குவதில் பெருமை பெற்ற மேஜர் ஃபார்ஸ்டர், கேப்டன் எல். ஸ்மித் மற்றும் பிற ஜெனரல்கள் அவரது புரட்சியை முறியடிக்க சம்பல்பூருக்கு கொண்டு வரப்பட்டனர். ஆனால் அனைத்து முயற்சிகளும் தோல்வியடைந்தன, சுரேந்திர சாய் நீண்ட காலமாக ஆங்கிலேயர்களின் உத்தியை முறியடிப்பதில் வெற்றி பெற்றார். முழு இராணுவ மற்றும் சிவில் அதிகாரமும், சுரேந்திர சாயையும் அவரது ஆதரவாளர்களையும் அடக்குவதற்கான ஒரு ஆணையரின் அதிகாரமும் கொண்ட புகழ்பெற்ற ஜெனரலான மேஜர் ஃபார்ஸ்டர், சம்பல்பூரில் மூன்று ஆண்டுகள் ஆட்சி செய்த பின்னர் 1861 இல் பிரிட்டிஷ் அதிகாரத்தால் நீக்கப்பட்டார். அவரது வாரிசான மேஜர் இம்பேயால் சாயை தோற்கடிக்க முடியவில்லை. ஆங்கிலேயர்கள் கிளர்ச்சியாளர்களின் முழு உணவுப் பொருட்களையும் கைப்பற்றினர், அவர்களுக்கு உணவு மற்றும் பிற வாழ்க்கைத் தேவைகளுக்கான அனைத்து வளங்களையும் நிறுத்தினர். மேஜர் இம்பே வன்முறைப் போர் என்ற கருத்தை கைவிட்டு, இந்திய அரசாங்கத்தின் ஒப்புதலுடன் அமைதி மற்றும் நல்லெண்ணக் கொள்கையை எச்சரிக்கையுடன் பின்பற்றினார். பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நேர்மை மற்றும் நேர்மையின் மீது முழு நம்பிக்கை வைத்து சுரேந்திர சாய் சரணடைந்தார். இருப்பினும், இம்பேயின் மரணத்திற்குப் பிறகு, சூழ்நிலைகள் திடீரென மாறின, பிரிட்டிஷ் நிர்வாகிகள் அவர் மீதான தங்கள் விரோதத்தை மீண்டும் தொடங்கினர்.

கடைசி நாட்கள்
சம்பல்பூர் புதிதாக உருவாக்கப்பட்ட மத்திய மாகாணங்களின் அதிகார வரம்பிற்குள் 1862 ஏப்ரல் 30 அன்று கொண்டுவரப்பட்டது; வீர் சுரேந்திர சாய் விரைவில் சரணடைய முடிவு செய்தார். இருப்பினும், அவர் ஏமாற்றமடைந்ததாகவும், புதிய அமைப்பு பழைய தாராளமயக் கொள்கையை மாற்றியமைத்ததாகவும் கூறப்படுகிறது.
வீர் சுரேந்திர சாயின் சரணடைதல் புரட்சியை முடிவுக்குக் கொண்டுவரவில்லை என்பதைக் கண்டறிந்த நிர்வாகிகள். அவர்கள் ஒரு சதித்திட்டத்தை ஒழுங்கமைக்க இறங்கி, வீர் சுரேந்திர சாயையும் அவரது அனைத்து உறவினர்கள், நண்பர்கள் மற்றும் ஆதரவாளர்களையும் திடீரென கைது செய்தனர். பின்னர் சாயும் அவரது ஆறு ஆதரவாளர்களும் ஆசிர்கர் மலைக்கோட்டையில் தடுத்து வைக்கப்பட்டனர். சாய் தனது வாழ்க்கையின் கடைசி பகுதியை சிறைபிடிக்கப்பட்டார். 1884 ஆம் ஆண்டு மே 23 ஆம் தேதி, சுரேந்திர சாய் தனது சொந்த நிலத்திலிருந்து விலகி ஆசிர்கர் கோட்டையில் இறந்தார்.

இந்தியாவில் பிரிட்டிஷ் பேரரசால் ஆக்கிரமிக்கப்பட்ட கடைசி நிலப்பகுதிகளில் சம்பல்பூர் ஒன்றாகும் , சுதேச அரசுகளை கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை . இது பெரும்பாலும் வீர் சுரேந்திர சாயின் முயற்சிகளால் ஏற்பட்டது. அவர் ஒரு சிறந்த வாள்வீரர். அப்பகுதி மக்கள் அவரை அன்பாக பீரா (அல்லது "வீர்" என்றால் துணிச்சலானது) சுரேந்திர சாய் என்று அழைத்தனர்.

## பிப்.24-இல் டில்லியில் மாநிலத் தேர்தல் ஆணையர்களின் தேசிய மாநாடு




**பெதுல், பிப்.6:**

வரும் பிப்ரவரி 24ஆம் தேதி தில்லியில் மாநிலத் தோதல் ஆணையாகளின் தேசிய மாநாட்டை இந்தியத் தோதல் ஆணையம் நடத்த உள்ளது. 25 ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு இம்மாநாடு நடைபெறுகிறது

இதுகுறித்து இந்தியத் தோதல் ஆணையம் தெரிவித்திருப்பதாவது:

இந்தியத் தோதல் ஆணையம் (இசிஐ) பிப்ரவரி 24 அன்று மாநிலத் தோதல் ஆணையர்களின் தேசிய மாநாட்டை நடத்தவுள்ளது.

புது டில்லியில் பாரத் மண்டபத்தில் நடைபெறும் இந்த மாநாட்டில், நாட்டின் அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் மாநிலத் தோதல் ஆணையாகள் கலந்துகொள்கின்றனா.

இந்த மாநாடு 25 ஆண்டுகளுக்கும் மேலான இடைவெளிக்குப் பிறகு நடைபெறுகிறது. கடைசியாக இதுபோன்ற மாநாடு 1999 ஆம் ஆண்டு நடைபெற்றது.

தலைமைத் தோதல் ஆணையா ஞானேஷ் குமாா, இந்த மாநாட்டிற்குத் தலைமை வகித்து, தொடக்க விழாவில் மாநிலத் தோதல் ஆணையாகளிடையே உரையாற்றுவாா.

தோதல் ஆணையாகள் டாக்டா சுக்வீா சிங் சந்து, டாக்டா விவேக் ஜோஷி ஆகியோா முன்னிலை வகிக்கின்றனா.

இம்மாநாட்டில் மாநிலத் தோதல் ஆணையாகள் தங்களின் சட்ட வல்லுநாகள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநாகளுடன் பங்கேற்று தங்கள் கருத்துக்களை முன்வைப்பாாகள்.

## போலி ஆவண வழக்கில் அல் ஃபலாஹ் பல்கலை தலைவர் கைது!






**புதுடெல்லி, பிப்.6:**

டில்லி குண்டுவெடிப்புக்குப் பிறகு, பல்கலைக்கழக மானியக் குழு (யுஜிசி) அளித்த புகாரின் பேரில், மோசடி மற்றும் முறைகேடுகள் தொடர்பான இரண்டு தனித்தனி முதல் தகவல் அறிக்கைகளின் அடிப்படையில், அல் ஃபலாஹ் பல்கலைக்கழகத்தின் தலைவரான ஜாவத் அகமது சித்திக்கியை தில்லி காவல்துறை குற்றப்பிரிவு போலீஸார் வியாழக்கிழமை கைது செய்துள்ளதாக காவல்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த விவகாரத்தில் அமலாக்க இயக்குநரகம் நடவடிக்கைகளைத் தொடங்கியதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது கூறப்படுகிறது.

கடந்த ஆண்டு நவம்பர் 10 ஆம் தேதி செங்கோட்டை அருகே நடந்த குண்டுவெடிப்புக்குப் பிறகு, ஹரியாணாவின் ஃபரிதாபாத் மாவட்டத்தில் உள்ள அல் ஃபலாஹ் பல்கலைக்கழகத்தின் செயல்பாடுகள் தொடர்பான முறைகேடுகள் மற்றும் போலி ஆவணங்கள் குறித்து குற்றப்பிரிவு போலீஸார் வழக்குகள் பதிவு செய்துள்ளனர்.

பல்கலைக்கழகத்தின் தலைவர் ஜாவத் அகமது சித்திக் உள்ளூர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். நீதிமன்றம் அவரை நான்கு நாட்கள் போலீஸ் காவலில் வைத்து விசாரிக்க குற்றப்பிரிவு குற்றப்பிரிவு போலீஸாருக்கு அனுமதி வழங்கியுள்ளதாக காவல்துறை அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர். சித்திக்கின் ரூ.140 கோடி மதிப்பிலான சொத்துக்கள் முடக்கப்பட்டுள்ளது.

நவம்பா 10 ஆம் தேதி ஜம்மு-காஷ்மீா, ஹரியாணா மற்றும் உத்தரபிரதேசம் முழுவதும் பரவியிருந்த 'வெள்ளை காலா பயங்கரவாத குழுவை' போலீஸாா முறியடித்தனா. 2,900 கிலோகிராம் வெடிபொருட்களை பறிமுதல் செய்ப்பட்டது. மேலும் மூன்று மருத்துவாகள் உள்பட 8 பேரை கைது செய்யப்பட்டனா. இவை நடந்து சில மணி நேரங்களுக்குப் பிறகு, தில்லியின் செங்கோட்டை மெட்ரோ நிலையத்திற்கு அருகே மெதுவாக நகரும் காா மீது அதிக தீவிரம் கொண்ட வெடிப்பு ஏற்பட்டது, இதில் 13 போ உயிரிழந்தனா மற்றும் பலா காயமடைந்தனா.

## மரணமடைந்த 2.5 கோடி பேரின் ஆதார் எண்கள் செயலிழப்பு - மத்திய அரசு நடவடிக்கை

**புதுடெல்லி, பிப்.6:**

மக்களவையில் இதுகுறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கு, மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை இணையமைச்சர் ஜிதின் பிரசாதா எழுத்துப் பூர்வமாக தாக்கல் செய்த பதிலில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

உலகிலேயே மிகப்பெரிய பயோமெட்ரிக் அடையாள அமைப்பு, நமது ஆதார்தான். ஏறத்தாழ 134 கோடி பேர் ஆதார் வைத்துள்ளனர். உயிரிழந்தோரின் ஆதாரை செயலிழப்பு செய்யும் வழக்கமான நடவடிக்கை போல, இந்திய தனித்துவ அடையாள ஆணையம் இதுவரை 2.5 கோடி ஆதார் எண்களை செயலிழப்பு செய்துள்ளது.

ஒருவர் இறந்து விட்டால், அவரின் ஆதார் எண் செயலிழப்பு செய்ய வேண்டியது அவசியமாகும். அரசின் நலத் திட்ட உதவிக்காக தவறாக பயன்படுத்தப்படுவதை தடுக்கவும், அடையாள மோசடிக்கு பயன்படுத்தப்படுவதை தவிர்க்கவும் இதுபோல செய்யப்படுகிறது. அடையாள மோசடி உள்ளிட்டவற்றுக்கு ஆதார் பயன்படுத்தப்படாமல் தடுக்க பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அதில் பயோமெட்ரிக் தகவலை வெளிப்படையாக வைப்பது, அல்லது மறைத்து வைக்கும் வசதியும் அடங்கும். ஆதாரை அடிப்படையாக வைத்த க்யுஆர்கோடு, இ-ஆதார் ஆகியவற்றை பிரபலப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை அரசு எடுத்துள்ளது. இவ்வாறு அந்தப் பதிலில் ஜிதின் பிரசாதா குறிப்பிட்டுள்ளார்.

## எஸ்.ஐ.ஆர். வழக்கு: உச்சநீதிமன்றத்தில் நேரில் வாதிட்டார் மம்தா பானர்ஜி

**புதுடெல்லி, பிப்.6:**

மேற்கு வங்கத்தில் தேர்தல் ஆணையத்தால் மேற்கொள்ளப்படும் எஸ்.ஐ.ஆர். பணிகளை எதிர்த்து மம்தா பானர்ஜி வழக்குத் தொடுத்துள்ளார். அதன் மீதான விசாரணை உச்சநீதிமன்றத்தில் தலைமை நீதிபதி சூர்ய காந்த் தலைமையிலான அமர்வில் புதன்கிழமை நடைபெற்றது. இதில் மனுதாரரான மம்தா பானர்ஜி ஆஜராகி முன்வைத்த வாதம்:

எஸ்.ஐ.ஆர். பணிகளில் மேற்கு வங்கம் வேண்டுமென்றே குறிவைக்கப்படுகிறது. மேற்கு வங்கத்தில் கடைப்பிடிக்கப்படும் கெடுபிடிகள், அஸ்ஸாமில் கடைப்பிடிக்கப்படவில்லை. இது ஏன்? மேற்கு வங்கத்துக்கு எங்கும் நியாயம் கிடைக்கவில்லை. இதுதொடர்பாக தேர்தல் ஆணையத்துக்கு நான் ஆறுமுறை கடிதம் எழுதியுள்ளேன். மேற்கு வங்கத்தில் எஸ்.ஐ.ஆர். பணிகளின்போது ஆதாரை தேர்தல் ஆணையம் ஏற்காமல் வேறு ஆவணங்களைக் கோரியது. ஏராளமான மக்கள் உயிருடன் இருந்தபோதிலும், இறந்துவிட்டதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. இந்த விவகாரத்தில் தேர்தல் ஆணையம் கேட்ட அனைத்தையும் மாநில அரசு அளித்துள்ளது. எஸ்.ஐ.ஆர். பணிகள் இதே கோணத்தில் மேற்கு வங்கத்தில் தொடர்ந்தால், ஏராளமானோர் வாக்குரிமையை இழப்பார்கள். இது ஜனநாயகத்தின் அடிப்படை மீதான தாக்குதலாகும். ஆதலால் உச்சநீதிமன்றம் இந்த விவகாரத்தில் தலையிட்டு ஜனநாயகத்தை காக்க வேண்டும். எனக்கு வாதிட அனுமதி அளித்த உச்சநீதிமன்றத்துக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என்றார் மம்தா பானர்ஜி.

## ரயிலை சுத்தமாக பராமரிக்க பயணிகளிடம் கூடுதல் கட்டணம் வசூலிப்பா? - மத்திய அரசு மறுப்பு

**புதுடெல்லி, பிப்.6:**

ரயில் பெட்டிகளை சுத்தமாக பராமரிப்பதற்கு பயணிகளிடம் கூடுதல் கட்டணம் எதுவும் வசூலிக்கப்படவில்லை என்று மத்திய அரசு மறுப்புத் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து மக்களவையில் எழுப்பப்பட்ட கேள்விக்கு ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் எழுத்துப் பூர்வமாக பதில் தாக்கல் செய்துள்ளார். அதில் அவர் தெரிவித்திருப்பதாவது: ரயில் பெட்டிகளை சுத்தமாக வைத்திருக்கவும், சுகாதாரத்தை பேணவும், அதை உறுதி செய்யவும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் இந்திய ரயில்வே எடுத்து வருகிறது. இதில் ரயில் பெட்டியின் உள்பகுதி, வெளிப்புற பகுதி மற்றும் கழிப்பறைகளை சுத்தமாக வைத்திருப்பதும் அடங்கும். இந்த பணிக்காக ஓடும் ரயிலில் ஊழியர் ஒருவர் இருப்பார். அவர் ஓடும் ரயிலில் சுத்தத்தை பராமரிப்பதுடன், அது தொடர்பான பயணிகளின் குறைகளையும் கேட்டறிவார். இதுமட்டுமின்றி, குறிப்பிட்ட ரயில் நிலையங்களிலும் ரயிலை சுத்தப்படுத்தும் பணி நடைபெறுகிறது. ரயில் பெட்டிகளில் இருந்து மனித கழிவுகள் வெளியே தண்டவாளத்தில் விழாமல் இருக்கும் வகையில், பயோ கழிப்பிட வசதியும் செய்யப்பட்டுள்ளது. இந்த பணிகள் அனைத்தும் தொடர்ந்து ஆய்வுகள் மூலமும், ரயில் மதாத், ரயில் ஒன் செயலி, பயணிகள் தெரிவிக்கும் கருத்துகள் அடிப்படையில் கண்காணிக்கப்படுகிறது. ரயிலை சுத்தமாக வைத்திருக்கவும், ரயில் நிலையங்களில் சுகாதாரத்தை பேணவும் தனியாக நிதி ஒதுக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது. இதற்காக பயணிகள் கட்டணத்துடன் சேர்த்து கூடுதல் தொகை வசூலிக்கப்படவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

## இந்தி மொழியில் யுனானி மருத்துவக் கல்வி: மத்திய பிரதேசத்தில் முதன்முறையாக அமல்

**புதுடெல்லி, பிப்.6:**



ஆங்கில மருத்துவத்தை அடுத்து, யுனானி மருத்துவக் கல்வி இந்தியில் போதிக்கப்பட உள்ளது. நாட்டில் முதன் முறையாக மத்திய பிரதேச மாநிலத்தில் இது அமலாக உள்ளது.

பாஜக ஆளும் ம.பி.யில் ஆங்கில மருத்துவக் கல்வி இந்தியில் துவக்கப்பட்டது. அந்தவகையில் யுனானி மருத்துவ கல்வி இந்தியில் தொடங்கப்பட உள்ளது. யுனானி மருத்துவத்தை இந்தியில் போதிக்க அதன் பாடங்களை ம.பி. அரசு தயார் செய்து வருகிறது.

இந்நிலையில், அம்மாநிலத்தின் ஆயுஷ் துறை உருது புத்தகங்களை இந்தியில் மொழி பெயர்த்துள்ளது. பியுஎம்எஸ் எனும் இளங்கலை மருத்துவக் கல்வியின் முதல் ஆண்டில் ஏழு பாடங்கள் உள்ளன. இவற்றில் ஐந்து பாடங்களுக்கான உருது புத்தகங்கள் இந்தியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இரண்டு பாடங்களுக்கான புத்தகங்கள் உருது மற்றும் அரபு மொழிகளில் உள்ளன. உடற்கூறியல் மற்றும் உடலியல் புத்தகங்களின் மொழிபெயர்ப்புப் பணியை மருத்துவக் கல்வித் துறை மேற்கொண்டது.

யுனானி மருத்துவத்திற்கான பாடத்திட்டம் ஒரே மாதிரியாக இருப்பதால், அதே புத்தகங்கள் இங்கும் பயன்படுத்தப்படும். இந்திய மருத்துவ முறைக்கான தேசிய ஆணையமும் இதற்கு ஆதரவாக உள்ளது. அந்த ஆணையம் இந்தியில் ஒரு பாடத்திட்டத்தை தயாரித்துள்ளது. இதற்கிடையில், ம.பி.யின் மருத்துவப் பல்கலைக்கழகம் உருது மற்றும் ஆங்கிலத்துடன் இந்தியிலும் வினாத்தாள்களைத் தயாரித்து வருகிறது.

சமீப ஆண்டுகளுக்கு முன் ஆங்கில மருத்துவமானது இந்தியில் போதிக்கப்படத் துவங்கியது. அதன் பாடங்களும் இந்தியில் மொழி மாற்றம் செய்யப்பட்டன. இதையடுத்து சமீப ஆண்டுகளாக உருது மொழி பாடங்கள் கொண்ட யுனானி மருத்துவத்தின் விரிவுரைகள் இந்தியில் போதிக்கப்பட துவங்கின. இப்போது அதன் உருது மற்றும் அரபி மொழிப் பாடங்களும் இந்தியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

எனவே, யுனானி மருத்துவக் கல்வியும் இனி இந்தியில் போதிக்கப்பட உள்ளது.

## பிரதமர் சூரிய மின்சக்தி திட்டத்தில் 28 லட்சம் வீடுகள் பயன்: ரூ.16,000 கோடி நிதியுதவி



**புதுடெல்லி, பிப்.6:**

இது தொடர்பாக மத்திய புத்தாக்க, மரபுசாரா எரிசக்தித் துறை இணையமைச்சர் ஸ்ரீபாத யசோ நாயக் எழுத்து மூலம் அளித்த பதிலில், 'சர்வதேச அமைப்புகள், நிறுவனங்களுடன் கைகோத்து சூரிய மின்உற்பத்தித் திட்டத்தை மத்திய அரசு வலுப்படுத்தி வருகிறது. கடந்த 2024-ஆம் ஆண்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டதில் இருந்து நாடு முழுவதும் 22,65,521 இடங்களில் கூரைகளின் சூரிய மின் உற்பத்தி தகடுகள் நிறுவப்பட்டுள்ளன. இதில் 28,24,518 வீடுகள் பயனடைந்துள்ளன. அவர்களுக்கு ரூ.16,061 கோடி நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. ஒரு கோடி வீடுகளில் நிறுவி 1 லட்சம் கோடி யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்வதும், கரியமிலவாயு வெளியேற்றத்தை 72 கோடி டன் குறைப்பதும் இலக்காகும். ஒவ்வொரு சூரிய மின் உற்பத்தித் தகடும் சுமார் 25 ஆண்டுகள் வரை செயல்படும். அந்த காலகட்டத்துக்குள் இலக்கு எட்டப்படும் என்று தெரிவித்துள்ளார்.

## மத்திய அரசின் பாரத் டாக்ஸி! 30% குறைந்த கட்டணத்தில் கார், ஆட்டோ, பைக் பயணம்..!

**புதுடெல்லி, பிப்.6:**



ஓலா, உபர் போன்ற செயலிகளுக்கு போட்டியாக பாரத் டாக்ஸி செயலியை மத்திய கூட்டுறவுத் துறை அறிமுகம் செய்யவுள்ளது.

இந்த செயலி மூலம் கார், ஆட்டோக்களை இயக்கும் ஓட்டுநர்கள் பெறும் தொகையில் எந்த பிடித்தமும் (கமிஷன்) செய்யப்படாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

டில்லியில் பாரத் டாக்ஸி செயலியை மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அமித் ஷா இன்று தொடங்கிவைக்கவுள்ளார்.

முதல்கட்டமாக 2.5 லட்சம் வாகனங்கள் இந்த செயலியில் பதிவு செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஓலா, உபர், ரேபிடோ செயலிகளைப் போலவே பாரத் டாக்ஸி செயலியிலும் பைக், ஆட்டோ மற்றும் கார்களை புக் செய்யலாம். உள்ளூர், வெளியூர் மற்றும் ரவுண்ட் டிரிப் வசதிகளும் உள்ளன.

### கமிஷன் கிடையாது

பாரத் டாக்ஸியை பயன்படுத்தும் ஓட்டுநர்கள் கமிஷன் அடிப்படையில் இல்லாமல் அவர்களே உரிமையாளர்களாக உள்ளனர். வாடிக்கையாளர்களிடம் இருந்து பெறும் தொகையில் எந்த கமிஷனும் பிடித்தம் செய்யப்படாது.

அதற்கு பதிலாக செயலி பராமரிப்புக் கட்டணமாக ஓட்டுநர்கள் நாளொன்றுக்கு ரூ. 30 செலுத்தினால் போதும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள ஓலா, உபர் போன்ற செயலிகளை விட பாரத் டாக்ஸி 30 சதவீதம் குறைந்த கட்டணத்தில் இயங்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தனியார் செயலிகள் ஒரு பயணத்துக்கு ரூ. 30 முதல் 50 வரை ஓட்டுநரிடமிருந்து கமிஷன் பெறுகிறார்கள். ஆனால், பாரத் செயலியைப் பயன்படுத்தும்போது அந்த கட்டணம் குறையும்.

இந்த செயலியில் உள்ளமைக்கப்பட்ட பாதுகாப்பு அம்சங்களும், பிரத்யேக உதவி எண்ணும் உள்ளன. கூடுதலாக, பயணிகளின் புகார்களை விரைவாகத் தீர்க்க தில்லி காவல்துறையுடன் இணைந்து 35 சிறப்பு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தத் தளத்தில் உள்ள ஓட்டுநர்களின் விவரங்கள் சரிபார்க்கப்பட்டிருக்கும்.

இந்த செயலி கடந்தாண்டு டிசம்பரில் தில்லி மற்றும் குஜராத்தில் சோதனை முறையில் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த சோதனையில், நாள்தோறும் சராசரியாக 5,500 பயணங்களைப் பதிவு செய்தது. இதில் 4,000 விமான நிலையப் பயணங்களும் அடங்கும். மேலும், 1.4 லட்சத்துக்கும் மேற்பட்ட ஓட்டுநர்கள் ஏற்கனவே பதிவு செய்துள்ளனர்.

## டில்லி-நேபாளம் இடையே நேரடி பேருந்து சேவை தொடக்கம்

**கச்சார், பிப்.6:**

டில்லி மற்றும் நேபாளத்தின் பெனி நகரம் இடையே நேரடி பேருந்து சேவை புதன்கிழமை தொடங்கப்பட்டது.

நேபாளத்தில் புகழ்பெற்ற ஏராளமான ஹிந்து கோயில்கள், புத்தமத கோயில்கள் உள்ளன. அதில் ஹிந்துக்கள், புத்தமதத்தினரால் சேர்ந்து வழிபடப்படும் முக்திநாத் கோயிலும் ஒன்றாகும். அக்கோயிலுக்கு செல்லும் நுழைவு வாயில் பகுதியாக நேபாளத்தின் காண்டகி மாகாணத்தில் உள்ள பெனி நகரம் கருதப்படுகிறது. அந்த பெனிக்கும், தில்லிக்கும் இடையே நேரடி பேருந்து சேவை புதன்கிழமை தொடங்கி வைக்கப்பட்டது.

இந்த பேருந்து சேவைக்கு நேபாள- இந்தியா நட்புறவு பேருந்து சேவை என பெயரிடப்பட்டுள்ளது. அந்த பேருந்து, பெனியில் இருந்து புறப்பட்டு சியாங்ஜா, வாலிங், பைரஹாவா, அயோத்தி, ஆக்ரா வழியாக தில்லி வந்தடையும். அதே வழிதடத்தில் நேபாளத்திற்கு மீண்டும் இயக்கப்படும்.

## எண்ணெய் வர்த்தகத்தை நிறுத்துவது பற்றி இந்தியா அறிவிக்கவில்லை! ரஷியா

**புதுடெல்லி, பிப்.6:**

கச்சா எண்ணெய் கொள்முதலை நிறுத்திக் கொள்ள இருப்பதாக இதுவரை இந்தியாவிடம் இருந்து அதிகாரப்பூர்வ தகவல் வரவில்லை என்று ரஷியா தெரிவித்துள்ளது.

இந்தியா - அமெரிக்கா இடையேயான வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தான நிலையில், இந்தியாவுக்கான வரியை 18 சதவீதமாக குறைப்பதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் அறிவித்திருந்தார்.

அத்துடன், ரஷியா கச்சா எண்ணெய் கொள்முதலை நிறுத்துவதாகவும், அமெரிக்கா மற்றும் வெனிசுவேலாவிடம் இருந்து அதிகளவிலான கச்சா எண்ணெய் கொள்முதலுக்கு பிரதமர் மோடி ஒப்புதல் அளித்திருப்பதாகவும் டிரம்ப் அறிவித்திருந்தார்.

இந்த நிலையில், டிரம்ப்பின் அறிவிப்பு குறித்து ரஷிய அதிபர் மாளிகையில் செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் கூறியிருப்பதாவது:

"இந்தியாவுக்கு எண்ணெய் மற்றும் பெட்ரோலியப் பொருள்கள் வழங்குவது ரஷியா மட்டுமல்ல என்பது அனைவருக்கும் தெரியும். பிற நாடுகளிடம் இருந்தும் இந்த பொருள்களை இந்தியா கொள்முதல் செய்து வருகின்றது. எனவே, இதில் நாங்கள் புதிதாக எதையும் காணவில்லை.

இந்தியா தான் விரும்பும் எந்த நாட்டிலிருந்தும் கச்சா எண்ணெய் கொள்முதல் செய்ய முழு சுதந்திரம் உள்ளது. எனினும், ரஷிய எண்ணெய் கொள்முதலை நிறுத்துவது குறித்து இந்தியாவிடமிருந்து எந்த அதிகாரப்பூர்வ தகவலும் மாஸ்கோவுக்கு வரவில்லை" எனத் தெரிவித்தார்.

## இண்டிகோவுக்கு எதிராக சிசிஐ விரிவான விசாரணைக்கு உத்தரவு

**காசியபாத், பிப்.6:**

விமான சேவை குளறுபடி விவகாரத்தில் நேர்மையற்ற வணிக நடவடிக்கைகளில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் கீழ், இண்டிகோ விமான நிறுவனத்துக்கு எதிராக இந்திய தொழில் போட்டி ஆணையம் (சிசிஐ) விரிவான விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது.

புதிய விமானப் பணி நேரக் கட்டுப்பாட்டு விதிகள் காரணமாக விமானிகள், விமானப் பணிப்பெண்கள் உள்ளிட்டோா அடங்கிய பணிக் குழுவுக்கு ஏற்பட்ட பற்றாக்குறையால், கடந்த ஆண்டு டிசம்பரில் இண்டிகோ விமான சேவைகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. இதனால் நாட்டின் பல்வேறு நகரங்களில், அந்த நிறுவனத்தின் ஏராளமான விமானங்கள் தொடர்ந்து ரத்து செய்யப்பட்டதால், ஆயிரக்கணக்கான பயணிகள் பெரும் அவதிக்குள்ளாகினா.

விமான சேவையில் ஏற்பட்ட குளறுபடிக்காக இண்டிகோ நிறுவனத்துக்கு விமானப் போக்குவரத்துத் தலைமை இயக்குநரகம் ரூ.22.2 கோடி அபராதம் விதித்தது. இந்நிலையில், சிசிஐ புதன்கிழமை வெளியிட்ட உத்தரவில், 'ஆயிரக்கணக்கான விமானங்களை ரத்து செய்து, தனது சேவைகளை நிறுத்தியதன் மூலம், விமானங்கள் கிடைப்பதில் செயற்கையான பற்றாக்குறையை இண்டிகோ உருவாக்கியது. விமானப் போக்குவரத்தில் ஆதிக்கம் செலுத்தும் ஒரு நிறுவனத்தின் இந்த நடவடிக்கை, தொழில் போட்டிச் சட்டத்தின் 4 (2)(பி)(ஐ) பிரிவுக்கு எதிரானது (அந்தச் சட்டத்தின் 4-ஆவது பிரிவு என்பது மற்ற நிறுவனங்களுடன் ஒப்பிடுகையில், ஒரு நிறுவனம் தமக்கு உள்ள ஆதிக்க நிலையைத் தவறாகப் பயன்படுத்துவதுடன் தொடாபுள்ள பிரிவாகும்). எனவே இந்த விவகாரம் தொடாபாக சிசிஐ தலைமை இயக்குநரின் விரிவான விசாரணைக்கு உத்தரவிடப்படுகிறது' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சபரிமலை: கேரள உயர்நீதிமன்றம் திருப்தி

**திருவனந்தபுரம், பிப்.6:**

சபரிமலை தங்கக் கவச முறைகேடு வழக்கை சிபிஐ வசம் ஒப்படைக்கக் கோரி, மாநில பாஜக தலைவர் ராஜீவ் சந்திரசேகர் உள்ளிட்டோர் தாக்கல் செய்த மனுக்கள் மீது உயர்நீதிமன்ற நீதிபதிகள் ராஜா விஜயராகவன், கே.வி.ஜெயகுமார் ஆகியோர் அடங்கிய அமர்வு முன் புதன்கிழமை விசாரணை நடைபெற்றது. அப்போது, 'சபரிமலை தங்கக் கவச வழக்கை விசாரிக்கும் எஸ்ஐடி, திறமையான அதிகாரிகளை உள்ளடக்கிய சிறந்த பிரிவாகும்; அவர்களின் பணியை கேள்விக்கு உட்படுத்துவதன் மூலம் அவர்களை மனச்சோர்வுக்கு ஆளாக்க மாட்டோம். எஸ்ஐடி விசாரணையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இப்போதைய நிலையில், சிபிஐ விசாரணைக்கு அவசியமில்லை' என்று நீதிபதிகள் தெரிவித்தனர். ஜாமீன் மனு மீது உத்தரவு ஒத்திவைப்பு: சபரிமலை ஐயப்பன் கோயில் கருவறைக் கதவுகளின் தங்கக் கவச முறைகேடு வழக்கில் ஏற்கெனவே ஜாமீன் பெற்ற உண்ணிகிருஷ்ணன் போற்றி, துவாரபாலகர் சிலை வழக்கிலும் ஜாமீன் கோரியிருந்தார். அந்த மனு மீதான உத்தரவை கொல்லம் நீதிமன்றம் புதன்கிழமை ஒத்திவைத்தது.




# டிக்கெட் பரிசோதகர்கள் சோதித்தபோது மின்சார ரயிலில் இருந்து குதித்த நபர்

**பொன்னேரி, பிப்.06:** மீஞ்சூர் அருகே மின்சார ரயிலில் டிக்கெட் பரிசோதகர்களின் பரிசோதனையின் போது, ரயிலில் இருந்து குதித்த நபரால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

சென்னை- கும்மிடிப்பூண்டி ரயில்வே மார்க்கத்தில் நேற்று காலை சென்னையிலிருந்து, கும்மிடிப்பூண்டி நோக்கி மின்சார ரயில் சென்று கொண்டிருந்தது. அந்த ரயில், திருவள்ளூர் மாவட்டம், மீஞ்சூர் அருகே நந்தியம்பாக்கம் ரயில் நிலையத்தில் நின்ற போது, தனேஷ்குமார், ஹேமந்த் ,கணேஷ் ஆகியோர் அடங்கிய டிக்கெட் பரிசோதகர்கள் குழுவினர் ஏறினர்.

ரயிலின் முதல் வகுப்புப் பெட்டியில் ஒரு டிக்கெட் பரிசோதகர், பயணச்சீட்டுச் சரிபார்ப்பில் ஈடுபட்டிருந்தபோது, உரிய பயணச்சீட்டு இல்லாமல் ஒரு நபர் பயணம் செய்தது தெரிய வந்தது. அவரிடம் டிக்கெட் பரிசோதகர், அபராதத் தொகையை வசூலிக்க முயன்றபோது, அவர் அபராதம் செலுத்த மறுத்ததால், இருவருக்குமிடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

இந்நிலையில், ரயில் அத்திப்பட்டு ரயில் நிலையத்தை அடைந்தபோது, அந்த நபர் ரயிலில் இருந்து குதித்து காயமடைந்தார். இதுகுறித்து, தகவலறிந்த எண்ணூர் ரயில்வே பாதுகாப்பு படையினர், சம்பந்தப்பட்ட நபரை மீட்டு, சிகிச்சைக்காக 108 ஆம்புலன்ஸ் மூலம் சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதித்தனர். அங்கு அவர் சிகிச்சை பெற்று வருகிறார்.

மேலும், அத்திப்பட்டு ரயில் நிலைய நடைமேடையில் இருந்த சில பயணிகள், டிக்கெட் பரிசோதகர்கள்தான் அந்த நபரை ரயிலில் இருந்து தள்ளிவிட்டதாகத் தவறாக எண்ணி, அவர்களைத் தாக்க முயன்றனர்.

பணியில் இருந்த எண்ணூர் ரயில்வே பாதுகாப்பு படை காவலர் ரவி, உடனடியாக டிக்கெட் பரிசோதகர்களை முன்பதிவு அலுவலகத்துக்குள் பாதுகாப்பாக அழைத்துச் சென்றார். அதைத் தொடர்ந்து, 10 பயணிகள் முன்பதிவு அலுவலகத்துக்குள் நுழைந்து குழப்பம் விளைவித்தனர். கொருக்குப்பேட்டை ரயில்வே போலீஸார், ரயில்வே பாதுகாப்பு படை போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பொன்னேரியில் கடன் தவணையை செலுத்த தவறியதால் தனியார் வங்கி ஊழியர்கள் மிரட்டல்: பாஜக நிர்வாகி தற்கொலை

**பொன்னேரி, பிப்.06:** கடன் தவணையை செலுத்த தவறியதால் தனியார் வங்கி ஊழியர்கள் மிரட்டல் விடுத்ததாக கூறப்படுகிறது. இதன் காரணமாக பொன்னேரி நகர பாஜக இளைஞரணி தலைவர் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக எழுந்துள்ள புகாரால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி, பர்மா நகர் பகுதியை சேர்ந்தவர் அரி (35). கார் ஓட்டுநரான இவர், பொன்னேரி நகர பாஜக இளைஞரணி தலைவராக இருந்து வந்தார். அரிக்கு சுபலட்சுமி என்ற மனைவியும், 2 வயது மற்றும் 1 வயதில் என, 2 ஆண் குழந்தைகள் உள்ளனர்.

இந்நிலையில், சுபலட்சுமி தன் குழந்தைகளுடன் பெற்றோர் வீட்டுக்கு சென்றிருந்த நிலையில், வீட்டில் தனியாக இருந்த அரி நேற்று முன் தினம் மாலை வீட்டின் கதவை உள்பக்கமாக தாழ்பாள் போட்டு தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டது உறவினர்கள் மற்றும் சுபலட்சுமிக்கு தெரிய வந்தது.

இதையடுத்து, அரியின் குடும்பத்தினர் காவல்துறைக்கு தகவல் தெரிவிக்காமல், உறவினர்கள் மற்றும் நண்பர்களின் அஞ்சலிக்காக அரியின் உடலை வீட்டு வளாகத்தில் வைத்திருந்தனர். இந்நிலையில், அரியின் உறவினர்கள், அவரது கையில் அலைபேசி எண் ஒன்று எழுதப்பட்டிருந்ததை பார்த்துள்ளனர்.

ஆகவே, அவர்கள் அரியின் மொபைல் போனை ஆய்வு செய்தபோது, இரு சக்கர வாகன கடன் தவணை செலுத்த தவறியதால் தனியார் வங்கி ஊழியர்கள் அரியை அவதூறாக பேசி, கொலை மிரட்டல் விடுத்தது தெரிய வந்ததாக கூறப்படுகிறது.

கடும் நடவடிக்கை எடுக்க கோரிக்கை: இதையடுத்து, அரியின் உறவினர்கள், 'அரி, தனியார் வங்கி கடன் மூலம் தன் மனைவிக்கு இரு சக்கர வாகனத்தை வாங்கிய நிலையில், கடன் தவணையை சில மாதங்களாக செலுத்தவில்லை. ஆகவே, தனியார் வங்கி ஊழியர்கள் அரியை மிரட்டியுள்ளனர்.

இதனால் ஏற்பட்ட மன உளைச்சல் காரணமாக அரி தற்கொலை செய்து கொண்டுள்ளார். எனவே, தனியார் வங்கி ஊழியர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என நேற்று காலை பொன்னேரி காவல் நிலையத்தில் புகார் அளித்தனர்.

தொடர்ந்து, அரியின் உடலை மீட்ட போலீஸார், பிரேத பரிசோதனைக்காக பொன்னேரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். பிறகு, போலீஸார் வழக்கு பதிவு செய்து, விசாரித்து வருகின்றனர்.

# காதலை கைவிட்டதால் பெண்ணை பாலியல் வன்கொடுமை செய்ய முயற்சி- வாலிபர் கைது

**தேனி, பிப்.06:** தேனி மாவட்டம் ஜெயமங்கலம் அருகில் உள்ள குல்லப்புரம் மேட்டுக்காலனியை சேர்ந்த சங்கிலி மகன் ஜான்பாண்டியன் (வயது 26). இவர் அதே பகுதியை சேர்ந்த 20 வயது பெண்ணை காதலித்து வந்தார். கருத்து வேறுபாடு ஏற்பட்டதால் இளம்பெண் காதலை கைவிட்டார்.

அதன் பிறகு பிரச்சனை ஏற்பட்டதால் பெரியகுளம் அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்தில் இளம்பெண் புகார் அளித்தார். போலீசார் ஜான்பாண்டியன் தரப்பினரை வரவழைத்து இனிமேல் அந்த பெண்ணுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடக்கூடாது என எழுதி வாங்கிக்கொண்டு அனுப்பி வைத்தனர்.

காதலை கைவிட்டு தன்னை போலீஸ் நிலையம் வரை புகார் கொடுத்து அசிங்கப்படுத்தியதால் சம்பவத்தன்று ஜான்பாண்டியன் தனது காதலி வீட்டிற்கு சென்றார். அங்கு அவரை தகாத வார்த்தைகளால் திட்டி ஆடைகளை கிழித்து பாலியல் வன்கொடுமை செய்ய முயன்றார். இளம்பெண் கூச்சலிடவே அருகில் இருந்தவர்கள் ஓடிவந்தனர். அப்போது அவருக்கு கொலை மிரட்டல் விடுத்துவிட்டு ஜான்பாண்டியன் தப்பி ஓடினார். இதுகுறித்து ஜெயமங்கலம் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார். சப்-இன்ஸ்பெக்டர் முருகப்பெருமாள், ஏட்டு சந்திரசேகர் ஆகியோர் வழக்குப்பதிவு செய்து ஜான்பாண்டியனை கைது செய்தனர்.

# சென்னை மக்கள் கடும் அவதி: இரவில் வாட்டி எடுக்கும் பனி- பகலில் கொளுத்தும் வெயில்

**சென்னை, பிப்.06:** தமிழகத்தில் மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் கடுமையான வெயில் வாட்டியெடுக்கும். தமிழகம் முழுவதும் கடந்த 2 மாதங்களாக இரவு நேரங்களில் கடுமையான பனிப்பொழிவு இருந்து வருகிறது. குறிப்பாக சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் மாலையில் தொடங்கும் பனிப்பொழிவு காலை வரையில் நீடிக்கிறது. இதன் காரணமாக வீடுகளுக்கு வெளியில் நிறுத்தி வைக்கப்படும் மோட்டார் சைக்கிள், கார்கள் ஆகியவையும் மழையில் நனைந்தது போல் ஆகிவிடுகின்றன.



காலை நேரங்களில் வெளியில் செல்பவர்கள் காதுகளை மறைத்துக்கொண்டும் ஸ்வெட்டர் அணிந்து கொண்டும் செல்லும் நிலை உள்ளது.

இப்படி இரவு நேரத்தில் கடுமையான பனி வாட்டி எடுக்கும் நிலையில் பகல் நேரங்களில் வெயில் கொளுத்த தொடங்கி இருக்கிறது. மார்ச், ஏப்ரல், மே ஆகிய மாதங்கள் கோடை காலங்களாக இருந்த போதிலும் கடந்த சில ஆண்டுகளாகவே பிப்ரவரி மாதத்தில் இருந்து வெயில் வாட்டி எடுத்து வருகிறது. அந்த வகையில் இந்த ஆண்டும் தற்போதே வெயிலின் தாக்கம் அதிகரிக்க தொடங்கி இருக்கிறது. நேற்று பகல் நேரத்தில் வெயிலின் தாக்கம் அதிகமாகவே இருந்தது. இது தொடர்பாக வானிலை ஆய்வாளர்கள் கூறும் போது, பனிக்காலம் இன்னும் சில தினங்களில் முடிவுக்கு வந்து வெயில் காலம் தொடங்கும். இதற்கு அறிகுறியாகவே வெயில் தலைகாட்ட தொடங்கி இருக்கிறது என கூறி உள்ளனர். இருப்பினும் தற்போதைய சூழலில் வெயில் பாதிப்பை விட பனி பாதிப்பே அதிக அளவில் உள்ளது.

இரவு நேரத்தில் அதிக அளவில் கொட்டும் பனி காரணமாக வயதானவர்கள் குழந்தைகள் ஆகியோர் சளித்தொல்லையாலும் அவதிப்பட்டு வருகிறார்கள். சுவாசப் பிரச்சனையால் ஏற்கனவே பாதிக்கப்பட்டு இருப்பவர்களுக்கு பனியின் தாக்கம் கூடுதல் பாதிப்பையே ஏற்படுத்தி இருக்கிறது. இதன் காரணமாக மாலை நேரங்களில் ஆஸ்பத்திரிகள் மற்றும் சிறிய கிளினிக்குகளில் பொது மக்கள் காய்ச்சல், தலைவலி உள்ளிட்ட நோய்களுக்கான சிகிச்சை எடுப்பதற்கும் அதிக அளவில் திரண்டு வருகிறார்கள்.

இந்தப் பனிக்காலம் இன்னும் சில நாட்களில் முடிவுக்கு வந்து கடுமையான வெயில் வாட்டி எடுக்க உள்ள சூழலில் தேர்தல் களமும் அப்போது சூடு பிடிக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

# பொய் புகார் அளித்த நிகிதாவை கைது செய்ய வேண்டும்- மடப்புரம் அஜித்குமாரின் தாயார் கண்ணீர் மல்க பேட்டி

**மதுரை, பிப்.06:** சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே உள்ள மடப்புரம் பத்ரகாளியம்மன் கோவில் காவலாளி அஜித் குமார் (வயது 28) என்பவரை கடந்த ஜூன் மாதம் நகை திருட்டு புகார் தொடர்பாக தனிப்படை போலீசார் அழைத்துச் சென்று விசாரணை என்ற பெயரில் அடித்து கொலை செய்தனர்.



இந்த கொலை வழக்கை சி.பி.ஐ. விசாரித்து வருகிறது. அஜித் குமாரை அழைத்துச் சென்று தாக்கி கொன்றதாக மானாமதுரை தனிப்படை போலீசார் 5 பேர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு உள்ளனர்.

இவர்கள் ஜாமின் கேட்டு மதுரை ஐகோர்ட்டில் தொடர்ந்த வழக்கு விசாரணையின் போது சி.பி.ஐ. தரப்பில் போலீஸ் காவலில் தான் அஜித்குமார் இறந்தது உறுதி செய்யப்பட்டுள்ளது. டி.எஸ்.பி. விசாரிக்க சொன்னதால் கடுமையாக தாக்கி போலீசார் இந்த செயலில் ஈடுபட்டுள்ளனர்.

இதில் 10 போலீஸ்காரர்களுக்கு தொடர்பு உள்ளது. நகை திருட்டு எதுவும் நடக்கவில்லை. பொய் புகாரில் அஜித் குமார் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது.

இதற்கு நீதிபதி, ஒன்றுமே இல்லாத காரணத்திற்காக ஒரு அப்பாவியை தாக்கி கொலை செய்துள்ளனர். மனம் பதைபதைக்கிறது என்று தெரிவித்ததோடு பொய் புகார் அளித்த நிகிதா மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என கேள்வி எழுப்பினார்.

இந்த நிலையில் திருப்புவனத்தில் அஜித்குமாரின் தாயார் மாலதி இன்று பேட்டி அளித்தார். அவர் நிருபர்களிடம் கூறியதாவது:-

எனது மகனை போலீசார் அடித்து கொன்று உள்ளனர். இந்த வழக்கில் எனது மகன் திருடன் இல்லை என்று நீதிபதி கூறியிருப்பது மனதுக்கு சந்தோஷமாக உள்ளது. இருப்பினும் எனது மகன் இறந்ததை தாங்கிக் கொள்ள முடியவில்லை.

சம்பவம் நடந்த போது எனது மகனை போலீசார் விசாரணை என்ற பெயரில் அழைத்துச் சென்றனர். ஆனால் அது குறித்து எனக்கு எதுவும் தகவல் தெரிவிக்கவில்லை. வீட்டுக்கு வந்த போலீசார் பீரோவை திறந்து அதில் இருந்தவைகளை சோதனை செய்தனர்.

அப்போது மற்றொரு மகனையும் விசாரணை என்ற பெயரில் அழைத்துச் சென்றனர். இரவு நீண்ட நேரமாகியும் 2 பேரும் வீட்டுக்கு வரவில்லை. இதனால் எனக்கும் பயம் ஏற்பட்டது. போலீஸ் நிலையத்திற்கு சென்ற போதும் அங்கு என்னை போலீசார் விரட்டி விட்டனர். உறவினர்கள் உள்ளிட்ட பலரிடம் கேட்ட போதும் மகன்களை போலீசார் விசாரித்து விட்டுவிடுவார்கள் என்று கூறினார்கள். அதை நம்பி இருந்த நிலையில் எனது மகனை போலீசார் அடித்து கொன்று உள்ளனர். எனது மகன் நகையை எடுத்தது யார் பார்த்தார்கள்? பொய் புகார் அளித்த நிகிதாவை கைது செய்ய வேண்டும்.

அஜித் குமாரை விசாரிக்க சொல்லி 5 போலீஸ்காரர்களிடம் கூறிய உயர் அதிகாரி யார்? என்பது எங்களுக்கு தெரியவேண்டும்.

கஞ்சிக்கு இல்லாவிட்டாலும் வைராக்கியத்துடன் மகன்களை வளர்த்துள்ளேன். ஆனால் நகை திருட்டு பொய் புகாரை கூறி எனது மகனை சாகடித்துள்ளனர். இந்த வழக்கில் போலீசார் எதற்காக எனது மகனை அடித்தார்கள்? யார் அடிக்க சொன்னது? எனது மகனை கொலை செய்து சிறையில் உள்ள 5 போலீஸ்காரர்கள் உட்பட யாரும் வெளியே வரக்கூடாது.

சி.பி.ஐ. விசாரணை மேல் எங்களுக்கு நம்பிக்கை உள்ளது. ஒரு தாய் என்ற உணர்வுடன் நீதிபதி நேற்று இந்த வழக்கில் சில கருத்துக்களை முன் வைத்துள்ளதை உணர்ந்துள்ளேன் என்றார்.

# பாதி விலையில் தங்கம் தருவதாக கோடிக்கணக்கில் மோசடி: தலைமறைவாக இருந்த ஏஆர்டி நகைக்கடை நிர்வாகிகள் 3 பேர் கைது

**சென்னை, பிப்.06:** முகப்பேர் பகுதியை தலைமையிடமாகக் கொண்டு 'ஏஆர்டி ஜுவல்லரி' என்ற பெயரில் நகைக்கடை இயங்கி வந்தது. இந்த நிறுவனத்தினர் பாதி விலையில் தங்கம் தருவதாகவும், முதலீட்டு பணத்துக்கு வாரம் 3 சதவீதம் வட்டி தருவதாகவும் கவர்ச்சிகரமான பல்வேறு திட்டங்களை விளம்பரம் செய்தனர்.

இதை நம்பி ஏராளமானவர்கள் கோடிக்கணக்கான பணத்தை முதலீடு செய்தனர்.

இதையடுத்து, இந்த நிறுவனம் தமிழகமெங்கும் கிளைகளை நிறுவியது. சில நாட்கள் வட்டியை வழங்கி வந்த இந்த நிறுவனம், பின்னர் உறுதியளித்தபடி நடந்துகொள்ளாமல் இழுத்தடித்தது.

அது மட்டுமல்லாமல் உரிமையாளர்கள் மற்றும் நிர்வாகிகள் என ஒவ்வொருவராக தலைமறைவாகினர். இதையடுத்து பணத்தை முதலீடு செய்து ஏமாந்த பொதுமக்கள் சம்பந்தப்பட்ட நிறுவன அலுவலகத்தில் முற்றுகைப் போராட்டம் நடத்தினர்.

பின்னர் இது தொடர்பாக சென்னை அசோக் நகரில் உள்ள பொருளாதார குற்றப்பிரிவு போலீஸில் புகார் அளித்தனர்.

அதன்படி போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்தனர். இதில் பண மோசடி நடைபெற்றது உறுதி செய்யப்பட்டது. இதையடுத்து முதல் கட்டமாக நிறுவன உரிமையாளர்கள், நிர்வாகிகள் என 14 பேர் அடுத்தடுத்து கைது செய்யப்பட்டனர்.

இதன் தொடர்ச்சியாக தலைமறைவாக இருந்த இந்நிறுவன நிர்வாகிகள் சென்னை அமைந்தகரையைச் சேர்ந்த அந்தோணி விமல் ராஜ் (34), கள்ளக்குறிச்சியைச் சேர்ந்த ஷமீர் அகமது (28), கொரட்டூரைச் சேர்ந்த பிரேமாவதி (62) ஆகிய 3 பேரை கைது செய்து சிறையில் அடைத்தனர். தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது.

# கொத்து கொத்தாக இறந்துபோகும் காகங்கள்... கையால் தொடாதீர்கள் என மக்களுக்கு எச்சரிக்கை

**சென்னை, பிப்.06:** சென்னை அடையாறு உள்ளிட்ட சில பகுதிகளில் கடந்த சில நாட்களாக காகங்கள் அதிகளவில் உயிரிழந்து வந்தது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இந்நிலையில், இறந்து போன காகங்களின் வைரஸ் தொற்று இருந்தது உறுதி செய்யப்பட்டுள்ளது என்று கால்நடைத் துறை தெரிவித்துள்ளது. செத்துக் கிடந்த காகங்களில் H5N1 வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.



ஆகவே பறவைகள் இறந்த பகுதிகளில் முழுமையான கிருமிநாசினி தெளிக்க வேண்டும் என்றும் இறந்த பறவைகளை கையால் தொட வேண்டாம் எனவும் கால்நடைத் துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.







# சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் வருவாய் அதிகரிப்பு

**சென்னை, பிப்.06:** சென்னையில் 2 வழித்தடங்களில் மெட்ரோ ரெயில்கள் இயக்கப்படுகின்றன. மெட்ரோ ரெயிலில் 3 லட்சத்துக்கும் மேற்பட்டோர் தினமும் பயணம் செய்கின்றனர். மெட்ரோ ரெயில் நிறுவனம் டிக்கெட் கட்டண வருவாய் மட்டுமின்றி, இதர வழிகளிலும் வருவாயை திரட்டும் பணிகளை கடந்த சில ஆண்டுகளாக மேற்கொண்டு வருகிறது.

வாகன நிறுத்தும் இடம் அதிகரிப்பு, மெட்ரோவுக்கு சொந்தமான இடங்களை தனியாருக்கு நீண்ட காலத்துக்கு குத்தகை விடுவது, ரெயில்கள், ரெயில் நிலையங்களில் தனியார் விளம்பரம் செய்ய அனுமதிப்பது உட்பட பல்வேறு வகைகளில் வருவாயை ஈட்டுகிறது. இதனால் அந்நிறுவனத்தின் வருவாய் கணிசமாக அதிகரித்து வருகிறது.

இதற்கிடையே, சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் 2024-25-ம் நிதியாண்டின் அறிக்கையை வெளியிட்டுள்ளது. அதன்படி




சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் மொத்த வருவாய் ரூ.369.49 கோடியிலிருந்து ரூ.425.64 கோடி ஆக உயர்ந்துள்ளது. இது 15 சதவீதம் அதிகமாகும்.

பயணக் கட்டண வருவாய் மட்டுமின்றி, இதர பிரிவுகளில் வருவாய் அதிகரித்துள்ளது. இதர பிரிவு வருவாய் ரூ.104.30 கோடியிலிருந்து ரூ.135.39 கோடியாக அதிகரித்துள்ளது. இது 30 சதவீதம் அதிகமாகும்.

வரும் ஆண்டுகளில் பயணிகள் எண்ணிக்கையும், இதர பிரிவுகளில் பயன்பாடுகளும் அதிகரிக்கும் என்பதால், வருவாய் மேலும் அதிகரிக்கும் என்று சென்னை மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# வறண்ட மூல வைகை ஆறு - கோடையில் குடிநீர் தட்டுப்பாடு அபாயம்

**வருசநாடு, பிப்.06:** தேனி மாவட்டம் கடமலை-மயிலை ஒன்றியத்தில் மொத்தம் 100-க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. அனைத்து கிராமங்களுக்கும் வைகை ஆற்றில் அமைக்கப்பட்டுள்ள உறை கிணறுகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.



அதேபோல வைகை ஆற்றை சார்ந்து பல ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் விவசாயம் நடைபெற்று வருகிறது. இங்கிருந்து வைகை அணைக்கு செல்லும் தண்ணீர் மூலம் 5 மாவட்ட விவசாயிகள் பயனடைந்து வருகின்றனர்.

தற்போது வெள்ளிமலை வனப்பகுதியில் போதிய மழை இல்லாததால், வைகை ஆற்றில் நீர்வரத்து மிகக் குறைந்து காணப்படுகிறது. விரைவில் கோடைக்காலம் தொடங்க உள்ள நிலையில், ஆறு முழுமையாக வறண்டு போகும் சூழல் ஏற்பட்டுள்ளது.

கோடையில் வெயிலின் தாக்கம் அதிகரிப்பதால் கிராமங்களில் நீரின் தேவை இருமடங்காக உயரும். அதே சமயம் வெயில் தாக்கம் காரணமாக நிலத்தடி நீர் மட்டம் குறைந்து உறைகிணறுகளில் நீர்மட்டம் வேகமாக குறையும் என்பதால் கிராமங்களில் கடும் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிக அளவில் உள்ளது.

எனவே அந்தந்த ஊராட்சி நிர்வாகங்கள் சார்பில் குடிநீரை சிக்கனமாக பயன்படுத்துவது குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். மேலும் கிராமங்களில் சேதம் அடைந்து குடிநீர் வீணாகி வரும் குழாய்களை உடனடியாக சீரமைக்க வேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக கோடையில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டால் அதைச் சமாளிக்கத் தேவையான முன்னேற்பாடு பணிகளை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

71 அடி உயரமுள்ள வைகை அணையின் நீர்மட்டம் தற்போது 45.60 அடியாக உள்ளது. அணைக்க 277 கன அடி நீர் வருகிறது. அணையில் இருந்து மதுரை சேடப்பட்டி, திருமங்கலம் குடிநீருக்காக 69 கன அடி மற்றும் பாசனத்துக்காக 300 கன அடி என மொத்தம் 369 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது. நீர் இருப்பு 1468 மி.கன அடியாக உள்ளது.

# சென்னை - ஜல்பைகுரி ரயில் தடம் புரண்டது!



**சென்னை, பிப்.06:** சென்னையில் இருந்து ஜல்பைகுரி நோக்கிச் சென்றுகொண்டிருந்த ரயில் தடம் புரண்டு விபத்துக்குள்ளானது.

சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் இருந்து மேற்கு வங்கத்தின் நியூ ஜல்பைகுரி ரயில் நிலையத்தை நோக்கி புதன்கிழமை காலை அதிவிரைவு ரயில் (எண் 22611) புறப்பட்டுச் சென்றது.

இந்த ரயில் இன்று காலை 8.51 மணியளவில் ஒடிஸா மாநிலத்தின் ஜாகபுரா ரயில் நிலையத்தை கடந்து செல்லும்போது, தண்டவாளத்தில் இருந்து தடம் புரண்டது. ரயிலின் ஒரு குளிர்சாதன பெட்டியும், இரண்டு முன்பதிவில்லா பெட்டியும் தண்டவாளத்தைவிட்டு விலகியதால் உடனடியாக ரயில் நிறுத்தப்பட்டது.

ரயிலில் பயணித்த யாருக்கும் காயம் ஏற்படவில்லை என்றும், அனைவரும் பத்திரமாக இருப்பதாகவும் முதல்கட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சம்பவ இடத்துக்கு விரைந்த ரயில்வே ஊழியர்கள், தண்டவாளத்தைவிட்டு விலகிய ரயில் பெட்டிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால், அவ்வழியாகச் செல்லும் ரயில்கள் ஆங்காங்கே நிறுத்தப்பட்டுள்ளது.

# சென்னையில் இன்று (06.02.2026) மின்தடை ஏற்படும் இடங்கள்...



**சென்னை, பிப்.06:** சென்னையில் பராமரிப்பு பணிகள் காரணமாக ஒரு சில பகுதிகளில் மின் தடை செய்யப்படுகிறது. காலை 9 மணி முதல் பிற்பகல் 2 வரை மின் தடை செய்யப்படும். பராமரிப்பு பணி முடிவடைந்தவுடன் மின் விநியோகம் கொடுக்கப்படும்.

அந்த வகையில், நாளை மின் தடை ஏற்படும் பகுதிகள் குறித்து தமிழ்நாடு மின்சார வாரியம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது. அதன்படி, சென்னையில் இன்று (06.02.2026) காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை மின் வாரிய பராமரிப்பு பணி காரணமாக பின்வரும் இடங்களில் மின் விநியோகம் நிறுத்தப்படும். அதன்படி,

கோயம்பேடு மார்க்கெட்: சீனிவாச நகர், பக்தவச்சலம் ரோடு, சேமத்தமன் நகர், இடார் சாலை, மேட்டுக்குளம், நியூ காலனி, திருவீதி அம்மன் கோவில் தெரு, சின்மயா நகர், நெற்குன்றம், ஆழ்வார் திருநகர், மூகாம்பிகா நகர், அழகம்மாள் நகர், கிருஷ்ணா நகர், புவனேஸ்வர் நகர், விஜிபி அமுதா நகர், சிடிஎன் நகர், சாந்தா அவென்யூ, சிவந்தி அவென்யூ, ரெட்டி தெரு, பெருமாள் கோவில் தெரு, கருணேகர் தெரு.

காரம்பாக்கம்: கந்தசுவாமி நகர், பொன்னி நகர், அருணாசலம் நகர், மோதி நகர், பத்மவாஹி நகர், காவேரி நகர், பாரதி நகர், தர்மராஜா நகர், விஸ்வநாதன் தெரு, பிராமணர் தெரு.

மாதவரம்: காசா கிராண்ட் ரெசிடென்ஷியல் டவர்.

# தமிழகத்தில் புற்றுநோய் பாதிப்பு ஒரு லட்சத்தைத் தாண்டியது! சென்னை முதலிடம்...




**சென்னை, பிப்.06:** தமிழகத்தில் கடந்த ஆண்டு புற்றுநோய் பாதித்தவர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்தைக் கடந்துள்ளதாக மத்திய அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் புற்றுநோய் பாதிப்பு குறித்து மத்திய சுகாதாரத்துறை மற்றும் குடும்ப நல அமைச்சகம் நாடாளுமன்றத்தில் அறிக்கை ஒன்றைத் தாக்கல் செய்துள்ளது.

அதன்படி, தமிழகத்தில் இதுவரை இல்லாத அளவுக்கு புற்றுநோய் பாதிப்பு முதல்முறையாக ஓராண்டில் ஒரு லட்சத்தைக் கடந்துள்ளது.

2025 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் 1,00,097 பேர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பெண்கள் 53,542 பேர், ஆண்கள் 46,555 பேர்.

பாதிப்பு கடந்த 2020-ல் 68,750, 2021-ல் 76,968 ஆகவும், 2022-ல் 89,265 ஆகவும், 2023-ல் 92,816 ஆகவும், 2024-ல் 96,486 ஆகவும் இருந்தது குறிப்பிடத்தக்கது.

பெண்கள் அதிகமாக மார்பக புற்றுநோய், கருப்பைப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆண்கள், வாய்ப்புற்றுநோய், பெருங்குடல் மற்றும் வயிற்றுப் புற்றுநோய்களால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.

அதிகபட்சமாகசென்னையில் 8,505 பேருக்கு புற்றுநோய் பாதிப்பு உறுதியாகியுள்ளது. அடுத்து காஞ்சிபுரத்தில் 7,295 பேருக்கும் வேலூரில் 6,525 பேருக்கும் உறுதியாகியுள்ளது.

புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வு மற்றும் நோய் கண்டறிதலையும் அதற்கான சிகிச்சை முறைகளையும் தீவிரப்படுத்த வேண்டும் என்று சுகாதார நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

தமிழகத்தில் 14 வயதுடைய பள்ளி மாணவிகளுக்கு கருப்பை வாய் புற்றுநோய் தடுப்பூசி செலுத்தும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.




காஞ்சிபுரம் திருவேளுக்கை ஸ்ரீஅழகிய சிங்கபெருமாள் சன்னதியில் 04-02-2026 புதன்கிழமை மாலை 6 மணிக்கு இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் சார்பாக E-காணிக்கை (E-OFFERING) இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் பிராந்திய மேலாளர் (REGIONAL MANAGER) உயர்திரு B.N.சிங் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் வங்கி அதிகாரிகள், அறங்காவலர் குழு தலைவர், அறங்காவலர் உறுப்பினர்கள் மற்றும் பக்தர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

# தன்முனை இளம் கவிஞர்களுக்கு கவிச்சுடர் கா.ந.கல்யாணசுந்தரம் விருதுகள் வழங்கப்பட்டன





**சென்னை, பிப்.06:** அண்மையில் சென்னை பட்டாபிராம் ஜி.பி.பார்ட்டி வளாகத்தில் நடைபெற்ற தன்முனை படைப்பாளர் பேரவை நடத்திய ஆண்டு விழாவில் தன்முனைக் கவிதைகள் எழுதும் இளம் கவிஞர்களுக்கு தன்முனைக் கவிதைகளின் தந்தை கா.ந.கல்யாணசுந்தரம் அவர்களின் பெயரில் விருதுகள் வழங்கப்பட்டன.

விழாவில் ஓவியக்கவிஞர் அமுதபாரதி அவர்கள் முன்னிலையில் இளம் கவிஞர்கள் ஆ.இனியவன், தேஜேஷ், இரா.சோபிகா, செ.ப.தர்ஷன், செ.ப.கமலசங்கர், ஷமீகா யாகூப், பா.நித்யா, தா.உ.பூர்வி, சாய் ஹரிணி, சு.பிரவந்திகா ஆகியோருக்கு கவிச்சுடர் கா.ந.கல்யாணசுந்தரம் விருதுகள் வழங்கினார். விருதுகள் பெற்ற இளம் கவிஞர்கள் தங்களது தன்முனைக் கவிதைகளை மேடையில் வாசித்து பார்வையாளர்களின் கைத்தட்டல்களைப் பெற்றனர்.

இளம் கவிஞர்கள் தங்களது பெற்றோர்களுடன் மேடைக்கு வந்து விருதுகளைப் பெற்றனர். சிறுவர்களுக்கு தன்முனைக் கவிதைகள் எழுதும் ஆற்றலை உருவாக்கி, பயிற்றுவித்து மேடையில் அறிமுகம் செய்த குழும நிறுவனர் அன்புச்செல்வி சுப்புராஜூ அவர்களை பாராட்டிப் பேசிய கவிச்சுடர் கா.ந.கல்யாணசுந்தரம் தமது பெயரில் விருதுகள் கொடுத்தது குறித்து பெருமிதம் அடைந்தார். மேலும் தன்முனைச் சுடர் விருதுகளை தொடர்ந்து தன்முனைக் கவிதைகள் குழுமமும் வழங்கிவருவதாகவும் அறிவித்தார். விருது பெற்ற இளம் கவிஞர்களின் பெற்றோர்களும் விழாவில் பெருமளவில் கலந்துகொண்டு பாராட்டினர்.

விழா மேடையில் தன்முனைக் கவிதைகள் குழும செயல்தலைவர் ந.வேலாயுதம், படைப்பாளர் பேரவை தலைவர் சு.சுப்புராஜூ மற்றும் நிர்வாகி கவிஞர் லட்சுமி செந்தில் ஆகியோர் உடனிருந்தனர். இளம் தலைமுறையினர் ஆர்வமுடன் தன்முனைக் கவிதைகள் எழுதும் முனைப்பினை பலரும் வியந்து பாராட்டினர்.

# பொது இடங்களின் சாதி பெயர்களை மாற்றுவதால் எந்தப் பயனும் ஏற்படாது: உயர்நீதிமன்றம்

**மதுரை, பிப்.06:** மக்கள் மனதில் உள்ள பாகுபாடுகளை அகற்றாமல், பொது இடங்களின் ஜாதி பெயா்களை மாற்றுவதால் எந்தப் பயனும் ஏற்படாது என சென்னை உயா்நீதிமன்ற மதுரை அமா்வு புதன்கிழமை தெரிவித்தது.

மதுரையைச் சோ்ந்த பரமசிவம் சென்னை உயா்நீதிமன்ற மதுரை அமா்வில் தாக்கல் செய்த மனு:

தமிழகத்தில் கிராமங்கள், குடியிருப்புகள், தெருக்கள், சாலைகள், நீா்நிலைகளின் பெயா்களில் உள்ள ஜாதி அடையாளங்களை நீக்குவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் தமிழக அரசால் வெளியிடப்பட்டது. ஆனால், இதில் பல நடைமுறை பிரச்னைகள் உள்ளன. எனவே, இந்த அரசாணைக்குத் தடை விதிக்க வேண்டும் என அவா் கோரினாா்.

இந்த மனு உயா்நீதிமன்ற நீதிபதிகள் ஜி. ஜெயச்சந்திரன், கே.கே. ராமகிருஷ்ணன் அமா்வு முன் புதன்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது, மக்களின் மனதிலேயே பாகுபாடு உள்ளது. இந்தப் பாகுபாடுகளைக் களையாமல் தெருக்களின் ஜாதி பெயா்களை மாற்றுவதால் எந்தப் பயனும் ஏற்படாது என நீதிபதிகள் தெரிவித்தனா்.

அப்போது, முதல் கட்டமாகவே இந்த முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. மக்கள் மனதிலும் மாற்றம் வரும் என அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து, வழக்கு விசாரணையை வருகிற 9-ஆம் தேதிக்கு ஒத்திவைத்து நீதிபதிகள் உத்தரவிட்டனா்.

# கோத்தகிரியில் சிறுத்தை தாக்கி ஐ.டி. ஊழியர் படுகாயம்

**கோத்தகிரி, பிப்.06:** நீலகிரி மாவட்டம் கோத்தகிரியில் செயல்படும் தனியார் பள்ளியில் நேபாளத்தை சேர்ந்த ஜனக் என்பவர் இரவு நேரக் காவலாளியாக பணிபுரிந்து வருகிறார்.

இவரது மகன் பகதூர் (25) பெங்களூருவில் உள்ள தகவல் தொழில் நுட்ப (ஐ.டி.) நிறுவனத்தில் பணியாற்றி வருகிறார். இந்நிலையில், விடுமுறைக்காக கோத்தகிரிக்கு வந்த பகதூர் நேற்று முன்தினம் இரவு வளர்ப்பு நாயுடன் வெளியே சென்றார். சில மணி நேரங்கள் கழித்து நாய் மட்டும் வீடு திரும்பியது.

இதனால் அதிர்ச்சியடைந்த உறவினர்கள் பகதூரைத் தேடினர். பள்ளி வளாகத்தில் படுகாயங்களுடன் கிடந்த பகதூரை மீட்டு, கோத்தகிரி அரசு மருத்துவமனையில் சேர்த்தனர்.

தகவலறிந்து வந்த வனத் துறையினர் விசாரணை மேற்கொண்டதில், பள்ளி வளாகத்தில் உலா வந்த சிறுத்தை, பகதூரின் வளர்ப்பு நாயை வேட்டையாட முயன்றதும், அதைக் காப்பாற்ற முயன்ற பகதூரைத் தாக்கியதும் தெரியவந்தது.

முதலுதவி சிகிச்சைக்குப் பின்னர் ஊட்டி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மேல் சிகிச்சைக்காக பகதூர் சேர்க்கப்பட்டுள்ளார்.




# 234 தொகுதிகளிலும் விருப்பமனு பெறும் தே.மு.தி.க.



**சென்னை, பிப்.06:** தமிழக சட்டமன்ற தேர்தலில் 234 தொகுதிகளிலும் தே.மு.தி.க. சார்பில் போட்டியிட விரும்புவோர் விருப்ப மனு அளிக்கலாம் என அக்கட்சியின் பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் அறிவித்துள்ளார். மேலும் இதுதொடர்பாக அவர் கூறியிருப்பதாவது:-

* சென்னை கோயம்பேட்டில் உள்ள அலுவலகத்தில் விருப்ப மனு பெறலாம்.

* நாளை முதல் பிப்ரவரி 12-ந்தேதி காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை விருப்ப மனு வழங்கலாம்.

* விருப்ப மனுக்களை வரும் 12-ந்தேதிக்குள் ஒப்படைக்க வேண்டும்.

* பொது தொகுதிக்கு விருப்ப மனு கட்டணம் ரூ.15 ஆயிரமாகவும், தனித்தொகுதிக்கு ரூ.10 ஆயிரமாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

# தோல்வி பயத்தில் எடப்பாடி பழனிசாமி- தினமும் தேர்தல் அறிக்கையை வெளியிடுகிறார்: செங்கோட்டையன்



**கோவை, பிப்.06:** தமிழக வெற்றிக்கழக நிர்வாகக் குழு தலைமை ஒருங்கிணைப்பாளர் செங்கோட்டையன் இன்று கோவை விமான நிலையத்தில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

பொதுவாக தமிழக மக்கள் இரண்டு இயக்கங்களே தமிழகத்தை ஆள வேண்டுமா? என்று சிந்தித்து வருகின்றனர். புதிதாக ஒருவர் தோன்ற வேண்டும் என்ற எண்ணம் மக்கள் மனதில் ஏற்பட்டுள்ளது. மக்கள் புதிய தலைமையை முடிவு செய்து விட்டனர். அந்த நோக்கத்தோடு எங்களது தமிழக வெற்றிக்கழகம் வீறுநடை போட்டு வருகிறது.

தமிழக வெற்றிக்கழக தலைவரான விஜயை பற்றி மற்ற கட்சிகள் கருத்து சொல்வதற்கு காரணம், அவர்களுக்கு தோல்வி பயம் வந்து விட்டது. அதனால் தான் எங்கள் தலைவரை ஒவ்வொரு இயக்கங்களும் மாறி மாறி கருத்தை தெரிவித்து வருகிறார்கள்.

இளைஞர்கள் மட்டுமல்லாமல் வெளிநாட்டில் உள்ள தமிழர்கள் 3 லட்சம் பேர் தமிழகத்தில் தேர்தல் எப்போது நடக்க போகிறது என்பதற்காக பதிவு செய்து, காத்திருக்கும் வரலாறு இந்திய வரலாற்றில் இடம் பெறப்போகிறது.


புதிய தலைமை ஆளவேண்டும். அதுவும், தமிழக வெற்றிக்கழக தலைவர் விஜய் ஆள வேண்டும் என்ற எண்ணம் புதிதாக வாக்களிக்க உள்ளவர்கள் மற்றும் அனைவரது மனதிலும் உள்ளது. எனவே 2026-ம் ஆண்டு எங்கள் தலைவர் விஜய் முதலமைச்சராக வருவார். 234 தொகுதிகளிலும் தமிழக வெற்றிக்கழகம் வெற்றி பெறும்.

அ.தி.மு.க வுக்கு தோல்வி பயம் வந்து விட்டது. அதனால் தான் எங்கள் தலைவரை பற்றி அவர்கள் விமர்சித்து வருகின்றனர். வெற்றி பெற வேண்டும் என்றால் அவர்கள் தி.மு.க.வை தான் பேச வேண்டும். இதில் இருந்தே பி டீமாக யார் செயல்படுகிறார்கள் என்பதை நாட்டு மக்கள் தெரிந்து கொள்ளட்டும்.

அவர் எந்த கருத்தை வேண்டுமானாலும் சொல்லட்டும். அதற்கு நான் கருத்து சொல்ல விரும்பவில்லை. தோல்வி பயம் எடப்பாடி பழனிசாமிக்கு ஏற்பட்ட காரணத்தால் தான் இப்படி பல்வேறு கருத்துக்களை தெரிவித்து வருகிறார்.

தேர்தல் அறிக்கை என்பது மொத்தமாக கொடுக்க வேண்டியது. ஆனால் தோல்வி பயம் வந்ததன் காரணமாகவே எடப்பாடி பழனிசாமி ஒவ்வொரு நாளும் சிந்தித்து, சிந்தித்து தேர்தல் அறிக்கையை வெளியிட்டு வருகிறார் என்றார்.

# ஹிந்தித் திணிப்புக் கிருமியைக் கட்டுப்படுத்தியாக வேண்டும்: கனிமொழி




**சென்னை, பிப்.06:** நோய்த்தொற்றைப் போல ஊரெங்கும் பரவும் ஹிந்தித் திணிப்புக் கிருமியைக் கட்டுப்படுத்தியாக வேண்டும் என திமுக எம்.பி. கனிமொழி பதிவிட்டுள்ளார்.

தமிழகத்தில் ஒரு சில ரயில் நிலையங்களில் ஹிந்தியை முதன்மைப்படுத்தி பெயர்ப் பலகைகள் வைக்கப்பட்டுள்ளன.

அதாவது பெயர்ப் பலகையில் நடுவில் அந்த ஊரின் பெயர், தமிழில் அல்லது ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருக்கும். ஆனால் புதிதாக வைக்கப்படும் பெயர்ப் பலகைகளில் ஹிந்தி நடுவில் இடம்பெற்றுள்ளது.

இதற்கு திமுக உள்ளிட்ட ஆளும் கூட்டணி கட்சியினர் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

திமுக எம்.பி. கனிமொழி தனது எக்ஸ் பக்கத்தில்,

“நோய்த்தொற்றைப் போல ஊரெங்கும் பரவிடும் இந்த இந்தித் திணிப்புக் கிருமியைக் கட்டுப்படுத்தியாக வேண்டும்.

சென்னை பூங்கா ரயில் நிலையத்தைத் தொடர்ந்து தற்போது சிவகாசியிலும் இந்தியை முதன்மைப்படுத்தி பெயர்ப்பலகை வைக்கப்பட்டுள்ளது” என்று பதிவிட்டுள்ளார்.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: paperboynewspaper@gmail.com